விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 03 செவ்வாய்க்கிழமை (19.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335

### தமிழரின் பிரச்சினைகள் குறித்து
## ஜனாதிபதி கோத்தாவுடன் பேச்சுவார்த்தைக்கு தயார்



**மாவை சேனாதிராசா தெரிவிப்பு**

(கொழும்பு)

நாட்டில் பெரும்பாலான மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜ பக்ஷவை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே வேளை தமிழ் மக்களின் பிரச்சினைகள் 23

### சஜித் பிரேமதாச தலைமையில்
## புதிய அரசியல் கட்சியை உருவாக்க நடவடிக்கை

(கொழும்பு)

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட சஜித் பிரேமதாச தலைமையில் புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க நீங்கவில்லை என் 23

### சிங்கள மக்களாலேயே வெற்றி பெற்றேன்
# தமிழ் மக்கள் என்னுடன் ஒன்றிணைய வேண்டும்



### புதிய ஜனாதிபதி கோத்தா அழைப்பு

(அநுராதபுரம்)

சிங்கள மக்களின் வாக்குகளால் மாத்திரமே நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளேன். தமிழ் மக்கள் என்னுடன் ஒன்றிணைந்து பயணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் 30 உறுப்பினர்கள் மகிந்தவுடன் இணையத் தயார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையில் உருவாக்கப்படும் அரசாங்கத்தில், ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த பல உறுப்பினர்கள் இணையவுள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அடுத்து வரும் சில நாட்களில் புதிய பிரதமராக மகிந்த 23

## பாராளுமன்ற தேர்தலே சிறந்தது – மகிந்த

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியுடன் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதே சிறந்ததென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாரஹென்பிட்டவில் மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் நிகழ்வு மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்ட மகிந்த ராஜ 23

### மோடியின் அழைப்பை
## ஏற்றுக்கொண்டார் ஜனாதிபதி கோத்தா

(கொழும்பு)

இலங்கையின் புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவை இந்தியாவுக்கு வருமாறு தான் அழைப்பு விடுத்துள்ளதாகவும், அந்த அழைப்பை அவர் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி 23

### ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்
## நாட்டு மக்கள் இடையே பிரிவினையை ஏற்படுத்தியுள்ளது

**அநுரகுமார திசாநாயக்க**

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் நாட்டு மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு மாறாக பிரிவினையை ஏற்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், தேசிய மக் 23

### ஜனாதிபதி கோத்தாவை
## சந்தித்தார் இந்தியத்தூதுவர்

(கொழும்பு)

ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து, இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து அவரைச் சந்தித்து 23

### அரச அலுவலகங்களில்
## தலைவர்களின் படங்கள் காட்சிப்படுத்தக்கூடாது

**ஜனாதிபதி கோத்தாவின் முதல் உத்தரவு**

(கொழும்பு)

அரச அலுவலகங்களில் அரச தலைவர்களின் படங்கள் காட்சிப் படுத்தக் கூடாது என புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ உத்தர விட்டுள்ளார். எந்தவொரு அரச் அலுவலகங்களிலும் எனது படமோ, பிரதமரின் படமோ அல்லது 23

## ஜனாதிபதியாக கோத்தா நேற்று பதவிப்பிரமாணம்

### இன்று கடமைகளை பொறுப்பேற்கிறார்



23

## பாராளுமன்றத்தைக் கலைக்க ஐ.தே.க பாராளுமன்ற குழு சம்மதம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைக்கும் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழு சம்மதம் தெரிவித்துள்ளது. நேற்று ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடல் அலரிமாளிகையில் நடைபெற்றது. இதில், பாராளுமன்றத்தைக் கலைக்கும் [illegible] 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அமைச்சுப் பதவியை ஏற்க மாட்டேன்? - டக்ளஸ்

கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் அமைக்கப்படவுள்ள புதிய அமைச்சர வையில் பங்கேற்பதில்லை என ஈபிடிபியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தீர்மானித்துள்ளார். அமைச்சர் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டு வரும் நிலையில் அவர் இந்த முடிவை எடுத்துள் ளார்.

"எமது மக்களின் அடிப்படை, அன்றாட, அரசியல் பிரச்சினைகளிற்கு சாத்தியமான தீர்வை உள்ளடக்கிய ஆவணம் ஒன்றை கோத்தபாயவிற்கு வழங்கியிருந்தோம்.

அவர் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்த நிலையில் என்னை நம்பி வாக்களிக்குமாறு மக்களிடம் கேட்டேன். அரசியல்வாதிகளும் ஊடகங்களும் கோத்தபாய பயப்பீதியை ஏற்படுத் தியதால் மக்கள் வாக்களிக்கவில்லை. மக்கள் வாக்களிக் காமல் அமைச்சு பதவியேற்பது தவறு. எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் மககள் ஆணையை பெற்று அமைச்சு பதவியேற்பேன்" இவ்வாறு தெரிவித்தார் டக்ளஸ் தேவானந்தா. (ம-3)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### வரவு செலவுத் திட்டம் - 2020

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக 2020ம் ஆண்டுக்குரிய வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் 19.11.2019ஆம் திகதியிலிருந்து 27.11.2019ஆம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்காக எமது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

**த.ஐங்கரன்**
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி,

(C-8265)



## கம்சப்பிரியா இசைக்கல்லூரி

இல.30, கிருஷ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
வட மா/க.அ/பண்/யாழ்/2015/02

எமது இசைக் கல்லூரியினால், 2019 இல் நடைபெற்ற வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு தோற்றி முதலாம் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களை நிர்வாகம் **பாராட்டி வாழ்த்தி** நிற்கின்றது.

அபிரா அம்பிகைவாசன், சேதா சந்திரதாசா, ஷெரினா துவாரகன், ஆன்அல்றிக்கா யூட் பற்றிக்றாம்சே, செவீனா கிளென், யுதர்ஷி இளங்கேசன், கவிநயா ஜீவகன், கேஷாயினி சத்தியன், லக்ஷிகா கிருஷ்ணகுமார், இவ்லின் நந்தாசா ஆனல்ட், கவ்றின் கெனிஷா, லக்ஷிகா கிருஷ்ணகுமார், சோபிகா கிருஷ்ணகுமார், சிவானுகா சண்முகநாதன்.

ஆசிரியர் (1103)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# சஜித்துக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்திருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியையும் கூறியிருக்கிறார்.

பிரதமர் அலுவலகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளும் எவ்வித அரசியல் தலையீடுகளும் அழுத்தங்களுமின்றி சுதந்திரமாகவும் நியாயமாகவும் செயற்படக் கூடிய சூழலொன்றை நாம் உருவாக்கினோம்.

அதனூடாக இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மிகவும் அமைதியானதும் நேர்மையானதுமான முறையில் நடைபெறுவதற்கும் வாக்காளர்கள் எவ்வித அச்சமுமின்றி வாக்குச்சாவடிகளுக்குச் சென்று தமது விருப்பத்திற்குரிய வேட்பாளருக்கு வாக்களிப்பதற்குமான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து, அது முடிவடையும் வரை அர்ப்பணிப்புடன் பணியாற்றிய தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், பொலிஸார், முப்படையினர் மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினருக்கும் அமைதியைப் பேணுவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிய பொதுமக்களுக்கும் நன்றி கூறுகின்றேன். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


## கண்ணீர்அஞ்சலி

கலாவல்லி சனசமூக நிலையத்தின் முன்பள்ளிக்கும் எமது கிராமத்துக்கும் அளப்பரிய பங்களிப்பை நல்கியவரும் தையிட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

தோற்றம்: 17.04.1928 மறைவு: 16.11.2019

**கணபதிப்பிள்ளை ஸ்ரீபத்மநாதன்** அவர்கள்

(அவுஸ்திரேலியா)



16.11.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கலாவல்லி சனசமூக நிலையமும் முன்பள்ளியும்**
**தையிட்டி கிழக்கு, காங்கேசன்துறை.** (1106)



# மரண அறிவித்தல்

## சீனியர் வைரமுத்து (குட்டியர்)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் பலாலியை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக சந்தனத்தறை உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் வைரமுத்து (குட்டியர்) கடந்த 16.11.2019 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தில்லையம்பலம் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மணிமாலையின் அன்புக் கணவரும் தங்கராணி, யோகராணி, மகேந்திரம், குணேஸ்வரி, ரவீந்திரன், தனேஸ்வரன், ஜெயா ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வரத்தினம், திலகநாதன், பாஸ்கரலிங்கம், சாந்தி, ராஜினி, சியாமளா, சுபாசினி ஆகியோரின் மாமனாரும், ரமேஸ்வரன், விஜிதா, ரஜிதா, திலக்ஷன், யோபிதா, வினு, சாரு, பிருந்தா, சமீதா, விதுஷன், கிருஸிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (19.11.2019) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் வல்வை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.



தொடர்புக்கு:-
0776949243 (மகன் ஜெயா)

(C-8266)

தகவல்:-
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்திலாவது என்னுடன் இணைந்து பயணிக்க தமிழ் மக்களே முன்வாருங்கள்-ஜனாதிபதி அழைப்பு


## ❖மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன்

## ❖பௌத்த கொள்கைகளுக்கு இணங்க செயற்படுவேன்

## ❖எந்தவொரு சர்வதேச தரப்பினருக்கும் அடிபணியாது சுயாதீனமாக இலங்கை இனிமேல் செயற்படும்

## ❖தீவிரவாதம், அடிப்படைவாதம், போதைப்பொருள் வர்த்தகம், பாதாள உலகக்குழுவினர், குற்றவாளிகள் இல்லாத ஒரு சமூகம் உருவாகும்







(அநுராதபுரம்)

எதிர்காலத்திலாவது தன்னுடன் இணைந்து பயணிக்க வருமாறு தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.

அநுராதபுரம்- ருவன்வெலி சாயவில், நேற்றுத் திங்கட்கிழமை இலங்கையின் ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட கோத்தபாய ராஜபக்ஷ, நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய விசேட உரையிலேயே மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

குறித்த உரையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "இலங்கை வாழ் பெரும்பான்மையான மக்கள் எனக்கு வழங்கியுள்ள ஆணைக்கு இணங்க நான் 7 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளேன்.

நான் மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து மக்களதும் எதிர்காலச் சந்ததியினரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன் என்பதை இவ்வேளையில் விசேடமாகக் கூறிக்கொள்கிறேன்.

எனது வெற்றிக்கு பெரும்பான்மையான சிங்கள மக்கள்தான் காரணம். நான் எமது வெற்றியில் ஒன்றிணையுமாறு தமிழ்-முஸ்லிம் மக்களிடம் கோரியிருந்தேன்.

ஆனால், அது நிறைவேறவில்லை. எனினும், எதிர்காலத்திலேனும் எனது செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்குமாறு நான் அனைத்து மக்களிடமும் கேட்டுக் கொள்கிறேன்.

தெற்கில் சிங்களக் குடும்பமொன்றில் பிறந்தவன் நான். அந்தவகையில், பௌத்த கொள்கைகளுக்கு இணங்க செயற்படுவேன்.

எனது காலத்தில் பௌத்த தர்மத்தை பாதுகாக்கவும், ஏனைய இனங்களை பாதுகாக்கவும் அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம்.

எமது கலாசாரம் பாதுகாக்கப்படும். அதேநேரம், ஏனையவர்களின் நம்பிக்கை, கலாசாரத்தை பாதுகாக்கவும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

எனது இந்த வெற்றிக்காக ஒத்துழைத்த அனைத்துத் தரப்பினருக்கும் நான் இவ்வேளையில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விசேடமாக மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷவுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





நாம் இலங்கையர் என்ற வகையில் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டியதே எமக்குள்ள தற்போதைய தேவையாகக் கருதப்படுகிறது.

இதற்கான வேலைத்திட்டங்களை நாம் ஆரம்பிக்க வேண்டும். எதிர்கால சந்ததியினர் பெருமையாக இங்கு வாழக்கூடிய ஒரு சூழலைத்தான் ஏற்படுத்த வேண்டும்.

இவற்றை நான் நிச்சயமாக ஆட்சிக் காலத்தில் மேற்கொள்வேன். தீவிரவாதம், அடிப்படைவாதம், போதைப்பொருள் வர்த்தகம், பாதாள உலகக்குழுவினர், குற்றவாளிகள் இல்லாத ஒரு சமூகத்தை நாம் நிச்சயமாக உருவாக்குவோம்.

மேலும், எந்தவொரு சர்வதேச தரப்பினருக்கும் அடிபணியாது, சுயாதீன நாடு என்ற வகையில் இலங்கை இனிமேல் செயற்படும் என்பதையும் நான் கூறிக் கொள்கிறேன்.

இதனூடாக உலகமே வியக்கும் ஒரு நாடாக இலங்கை நிச்சயமாக மாற்றமடையும். சட்டம் ,நீதி இலங்கையில் நிலைநாட்டப்படும்.

எமது கொள்கைப் பிரகடனத்தில் கூறிய அனைத்து உறுதிமொழிகளையும் நிறைவேற்ற விரைவில் நடவடிக்கை எடுப்போம்.

21 ஆம் நூற்றாண்டின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில், அனைத்துத் துறைகளும் தொழில்நுட்ப மயமாக்கப்படும்.

எமக்கு முன்னால் பாரிய சவால்கள் இன்று காணப்படுகின்றன. ஆனால், எதுவுமே முறியடிக்க முடியாத சவால்கள் அல்ல.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில், நாட்டின் தேவைக்காக எனது அதிகாரத்தைப் பயன்படுத்த ஒரு போதும் பின்வாங்கப்போவதில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி-10 கிரிக்கெட் தொடரில் அபுதாபி, பங்களா டைகர்ஸ், மராதா அரேபியன்ஸ் அணிகள் கலக்கல் வெற்றி




10 ஓவர்களை கொண்ட ரி-10 கிரிக்கெட் தொடரின் மூன்றாவது அத்தியாயம் தற்போது, ஐக்கிய அரபு அமீரகத்தில் விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது.

குழு பி பிரிவில் நடைபெற்ற 7ஆவது லீக் போட்டியில், நோர்தன் வோரியஸ் அணியும், அபுதாபி அணியும் பலப் பரீட்சை நடத்தினர்.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நோர்தன் வோரியஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய நோர்தன் வோரியஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட் இழப்புக்கு 92 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து, 93 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அபுதாபி அணி, 8.3 ஓவர்கள் நிறைவில் வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அபுதாபி அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

குழு பி பிரிவில் நடைபெற்ற 8ஆவது லீக் போட்டியில், பங்களா டைகர்ஸ் அணியும், கர்நாடகா டஸ்கர்ஸ் அணியும் மோதிக் கொண்டன.

அபுதாபியில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களா டைகர்ஸ் அணி, முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய கர்நாடகா டஸ்கர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில். 1 விக்கெட் இழப்புக்கு 114 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதனைத் தொடர்ந்து 115 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களா டைகர்ஸ் அணி, 8.5 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் பங்களா டைகர்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

குழு ஏ பிரிவில் நன்டபெற்ற 9ஆவது லீக் போட்டியில், மராதா அரேபியன்ஸ் அணியும், க்யலண்டர்ஸ் அணியும் மோதின.

அபுதாபியில் நடைபெற்ற இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற க்யலண்டர்ஸ் அணி, முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய மராதா அரேபியன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 107 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.இதனைத் தொடர்ந்து 108 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய க்யலண்டர்ஸ் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் 60 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் மராதா அரேபியன்ஸ் அணி 47 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

# மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான ரி-20 தொடரை வென்றது ஆப்கானிஸ்தான் அணி




மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டியில், ஆப்கானிஸ்தான் அணி, 29 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஆப்கானிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை, 2-1 என்ற கணக்கில் வெற்றிக் கொண்டது.

லக்னொவ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 156 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து, 157 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 127 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் ஆப்கானிஸ்தான் அணி, 29 ஓட்டங்களால் வெற்றியை பதிவு செய்தது.

ரி-20 தொடரை ஆப்கானிஸ்தான் அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

இறுதியாக இரு அணிகளுக்கிடையிலான ஒரேயொரு டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 27ஆம் திகதி லக்னொவ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# உள்நாட்டு போட்டிகளில் ஜொலித்தால் சர்பராஸ்க்கு பாகிஸ்தான் அணியில் இடம்

## –இம்ரான்கான் தெரிவிப்பு




கேப்டன் பதவியில் இருந்து நீக்கப்பட்ட சர்பராஸ் அகமது உள்நாட்டு தொடரில் சிறப்பாக விளையாடினால் பாகிஸ்தான் அணிக்கு திரும்பலாம் என இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டனாக இருந்தவர் சர்பராஸ் அகமது. டெஸ்ட் மற்றும் டி20 கிரிக்கெட் கேப்டனில் பதவில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்ட நிலையில், அணியில் இருந்தும் நீக்கப்பட்டார்.

இந்நிலையில் அவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிடவில்லை. உள்நாட்டு போட்டியில் சிறப்பாக விளையாடினால் அணியில் மீண்டும் அவருக்கு இடம் உண்டு என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டின் புரவலராக இருக்கும் இம்ரான் கான் இதுகுறித்து கூறுகையில் "டி20 கிரிக்கெட்டில் விளையாடுவதை வைத்து வீரரின் ஆட்டம் மற்றும் ஃபார்ம்-ஐ நிர்ணயிக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் சரியானது. உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக விளையாடினால் சர்பராஸ் அகமதுவால் மீண்டும் பாகிஸ்தான் அணிக்கு திரும்ப முடியும்" என்றார்.

# பந்தை சேதப்படுத்திய பூரனுக்கு ஆதரவளித்த ஸ்டீவ் சிமித்

ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான ஆட்டத்தில் பந்தை சேதப்படுத்தி தடைக்குள்ளான நிக்கோலஸ் பூரனுக்கு ஸ்மித் ஆதரவு தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் தலைசிறந்த வீரரான ஸ்மித் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கினார். ஓராண்டு தடைக்குப்பின் தற்போது சர்வதேச கிரிக்கெட்டிற்கு திரும்பியுள்ளார். முதல் தொடரான ஆஷஸில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தான் - வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதிய ஆட்டத்தின்போது வெஸ்ட் இண்டீஸ் வீரர் நிக்கோலஸ் பூரன் பந்தை சேதப்படுத்தியது தெரிய வந்தது. இதனால் அவருக்கு நான்கு போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த பிரச்சினையில் இருந்து மீண்டு வலுவான வீரராக வருவார் என ஸ்மித் நிக்கோலஸ் பூரனுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளார்.

நிக் கோலஸ் பூரன் குறித்து ஸ்டீவ் ஸ்மித் கூறுகையில் "ஒவ்வொருவரும் மாறுபட்டவர்கள். அதேபோல் ஒவ்வொரு கிரிக்கெட் போர்டும் மாறுபட்டது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை அவரவர் வழிகளில் கையாள்வார்கள். என்னைப் பொறுத்த வரைக்கும், முகத்தில் அறையப்பட்டு அதை எதிர்கொண்டேன்.

எனக்கு நிக்கோலஸ் பற்றி தெரியும். அவருடன் சிறிய காலம் கிரிக்கெட் விளையாடியுள்ளேன். அவர் திறமையான வீரர். அவருக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது. அவர் தவறில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு, அதில் இருந்து கடந்து செல்வார் என நினைக்கிறேன். நான் இந்த விடயத்தை கடினமாக உணர்ந்ததில்லை. நான் கடந்த காலத்தில் இருந்து விலகி வந்துவிட்டேன். தற்போது வரவிருக்கும் கிரிக்கெட் போட்டிகள் மீது கவனம் செலுத்துகிறேன். கரிபீயன் பிரிமீயர் லீக்கில் பூரனுடன் விளையாடியுள்ளேன். ஒயிட் பால் கிரிக்கெட்டில் அவர் ஒரு தலைசிறந்த வீரராக இருக்கப் போகிறார் என்று நினைக்கிறேன்" என்றார்.





# டோனியை விளாசும் கம்பீர்

எம்எஸ் டோனி சொன்ன அந்த ஒரு வார்த்தையால்தான் உலகக்கோப்பை இறுதிப் போட்டியில் என்னுடைய சதம் பறிபோனது என்று கவுதம் காம்பீர் நினைவு கூர்ந்துள்ளார்.

இந்தியாவில் கடந்த 2011-ம் ஆண்டு நடைபெற்ற 50 ஓவர் கிரிக்கெட் உலகக் கோப்பையை இந்தியா வென்றது. மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்தியா - இலங்கை அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

சேவாக், டெண்டுல்கர் ஏமாற்றம் அளித்த நிலையில் கவுதம் கமபீர் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 122 பந்தில் 97 ரன்கள் எடுத்த நிலையில் க்ளீன் போல்டாகி சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்ததார்.

நான் சதம் அடிக்காமல் போனதற்கு, அந்த ஓவருக்கு முன் எம்எஸ் டோனி என்னிடம் ஞாபகப்படுத்திய அந்த ஒரு வார்த்தைதான் என காம்பீர் தெரிவித்துள்ளார்.

தற்போது அவுட்டானதற்கு முந்தைய ஓவரில் நான் நடந்ததை நினைத்து பார்க்கிறேன். அப்போது டோனி என்னிடம் இன்னும் மூன்று ரன்கள் இருக்கிறது. மூன்று ரன்கள் அடித்தால் உங்களுடைய சதம் பூர்த்தியாகும் என்று கூறினார்.

உங்களது மனநிலை திடீரென தனிப்பட்ட ஆட்டம் நோக்கி செல்லும்போது, உங்களுக்கு படபடப்பு ஏற்படும். அதற்கு முன்பு வரை இலங்கை நிர்ணயித்த டார்கெட்டை எட்ட வேண்டும் என்று நினைப்பு இருந்தது. இந்த ஒரு நினைப்பு மட்டுமே இருந்திருந்தால், ஒருவேளை நான் எளிதாக சதம் அடித்திருக்கலாம்.

97 ரன்கள் எடுத்திருக்கும் வரை நிகழ் காலத்தில் இருந்தேன்.ஆனால், உடனடியாக 100 ரன்களுக்கு இன்னும் மூன்று ரன்கள் தான் இருக்கிறது என்பதை நான் நினைத்த உடன், படபடப்பு தொற்றிக் கொண்டது.நான் அவுட்டாகி வீரர்கள் அறைக்கு திரும்பும்போது எனக்குள்ளே நான் சொல்லிக் கொண்டது, எஞ்சிய வாழ்நாள் முழுவதும் இந்த மூன்று ரன்கள் பெரிய பிரச்சினையாக இருக்கும் என்பதுதான்.அது உண்மையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கச்சார்பாக செயற்பட்ட தனியார் ஊடகங்கள் மீது தேசப்பிரிய கடும் காட்டம்



(கொழும்பு)

அமைதியானதும் சுமுகமானதுமான தேர்தலை நடத்தி முடிப்பதற்கு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, தேர்தல் காலத்தில் பக்கச்சார்பாக செயற்பட்ட அரச மற்றும் தனியார் ஊடகங்கள் மீது கடும் விசனத்தையும் வெளியிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான இறுதி முடிவை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இராஜகிரியவில் உள்ள சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைதியான முறையில் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு உதவிய அனைத்துக் கட்சிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

தேர்தலில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களும் வேட்பாளர்களை பிரதிநிதித்துவப்படுத்திய கட்சியின் செயலாளர்களும் ஆதரவாளர்களும் அமைதியான தேர்தல் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கினர். மேலும் சிவில் அமைப்புக்கள். தொழிற்சங்கங்கள் என்பவற்றோடு தேர்தலில் முக்கிய பாகம் வகித்த வாக்காளர்களும் அமைதியான தேர்தல் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கின்றேன். இந்த அமைதியான நிலவரத்தை இறுதி வரையில் தக்க வைத்துக் கொள்வதற்கு பொலிஸ் மற்றும் முப்படையினர் உள்ளிட்ட பாதுகாப்பு துறையினர் முழுமையாக தமது ஒத்துழைப்பை வழங்கியிருக்கின்றனர் என்றார்.

**ஊடகங்கள் மீது விசனம்**

இம்முறை நடைபெற்றதைப் போன்றே எதிர்வரும் காலங்களிலும் பொலித்தீன் பாவனையற்ற தேர்தல்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கின்றேன். எனினும் பக்கச்சார்பாக செயற்பட்ட தனியார் மற்றும் அரச ஊடகங்களை அவ்வாறு செயற்படவிடாமல் தடுப்பதற்கு ஆணைக்குழுவால் முடியாமல் போனதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். சட்ட ரீதியான அரச ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கின்ற போதிலும் தனியார் ஊடகங்களை முறையாக வழி நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லாமையே இதற்கான காரணமாகும்.

எனினும் சட்டத்தை மீறி செயற்பட்ட அரச ஊடக அதிகாரிகள் மீது அரசியலமைப்பிற்கேற்ப தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும். இதேவேளை தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அல்லது குறிப்பிட்ட தனியார் ஊடகமொன்று தாம் குறித்த கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுகின்றோம் என்பதை பகிரங்கமாக அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறில்லை என்றால் எதிர்காலத்தில் தேர்தல்கள் இன்றி தனியார் ஊடகங்களின் பிரதானிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான அதிகாரத்தை வழங்குவது பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவில் நிச்சயம் கலந்துரையாடப்படும்.

தேர்தலில் விமானப்படை, கடற்படை , இராணுவம் மற்றும் பொலிஸார் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டதாக முறைப்பாடுகள் எவையும் கிடைக்காமை மகிழ்ச்சியளிக்கிறது.

இதேபோன்று எதிர்காலத்திலும் பாதுகாப்புத் துறையினர் சீருடை அணிந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாமலிருக்கும் நிலைமையே காணப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இது அரசியல்வாதிகளின் நடைமுறைக் கோவைகளில் உட்படுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாக நான் கருதுகின்றேன்.

மேலும் அரசியல் அதிகாரம் அற்ற அரச உத்தியோகத்தர்கள் சிறியளவில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எனினும் இதுவும் கவலைக்குரிய விடயமாகும். இவர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

**மதத் தலைவர்களின் தலையீடு**

மேலும் கடந்த தேர்தல்களை விடவும் இம்முறை மதத் தலைவர்களின் அரசியல் தலையீடு குறைவாகவே காணப்பட்டது. மதத் தலைவர்களுக்கு ஏனைய சாதாரண பிரஜைகளைப் போன்று அரசியலில் ஈடுபடுவதற்கு எவ்வித தடையும் கிடையாது.

ஆனால் தேர்தல் காலங்களில் அவர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு சட்டம் கிடையாது. எனவே இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதில் அரசியல் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோத்தபாயவுடன் முஸ்லிம் சமூகம் இனியாவது கைகோர்க்க வேண்டும்

## -அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா-

(கொழும்பு)

நாட்டின் முன்னேற்றத்திற்கும் சமாதானம் மற்றும் சக வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கும் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுடனும் அரசாங்கத்துடனும் முஸ்லிம் சமூகம் இனியாவது கைகோர்க்க வேண்டும் என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வலியுறுத்தியது.

நாட்டின் ஏழாவது நிறைவேற்றதிகாரமுடைய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ஷவிற்கு வாழ்த்துத் தெரிவித்து அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவால் நேற்று வெளியிடப்பட்ட டுவிட்டர் பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்து திருகோணமலையில் கொண்டாட்டம்

## பாற்சோறும் பரிமாறல்





(திருகோணமலை) ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வாழ்த்துத் தெரிவித்து திருகோணமலையிலும் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

இலங்கை சோசலிச குடியரசின் 7 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ நேற்று திங்கட்கிழமை பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்நிலையில் அவருக்கு வாழ்த்துத்தெரிவித்து நாட்டின் பல பாகங்களிலும் வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் திருகோணமலை மாவட்டத்திலும் நேற்று கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

இதன்போது மாவட்டத்தின் பல பகுதிகளில் பாற்சோறு பரிமாறும் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பட்டாசு கொளுத்தி ஆதரவாளர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (இ-7)

# மரண அறிவித்தல்

## அமரர் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்

### (ஆவரங்கால் மணியம்)



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் இல.112/1, விசுவமடு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட (ஆவரங்கால் மணியம்) சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் 17.11.2019 (ஞாயிற்றுக்கிழமை) காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி -நல்லபிள்ளை தம்பதியரின் மகனும் நடராசா-நித்தியலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராணி (வேவி)யின் அன்புக் கணவரும் வசந்தன் (பிரான்ஸ்), உஷா (நோர்வே), சிறிதரன் (ஆசிரியர், மு/விசுவமடு மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தெய்வமோகனா (பிரான்ஸ்), முருகதாசன் (நோர்வே), பவித்திரா (ஆசிரியர், மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுர்சிகா, யதுர்சிகன் (பிரான்ஸ்), திலக்சன், றதுசன் (நோர்வே), திலக்சிகா, திலக்சிகன் (மாணவர்கள், மு/விசுவமடு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.11.2019 இன்று செவ்வாய்க்கிழமை விசுவமடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 112/1,விசுவமடு மேற்கு, விசுவமடு.

தகவல்:- மகன் சி.சிறிதரன் (ஆசிரியர், மு/ விசுவமடு ம.வி) 077 288 0931

(996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் வெற்றியை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சாவகச்சேரி ஆதரவாளர்கள் புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி நகர் வரை மேள தாளங்கள் மற்றும் வெடி கொளுத்தி ஆர்ப்பரிப்புக்களுடன் நேற்று முன்தினம் மாலை கொண்டாடினர். (படங்கள்:-சுபேசன்)

# செயற்றிட்ட உதவியாளர் நியமனம் தொடர்பில் யாழ்.மாவட்ட செயலகத்தில் தகவல் அறிய தீர்மானம்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் நியமனம் கிடைக்கப்பெற்றோர் நாளை புதன் கிழமை யாழ்.மாவட்ட செயலகத்திற்குச் சென்று தமக்கான நியமனங்கள் தொடர்பில் தெரிந்து கொள்ள இருப்பதாகத் தெரிவித்தனர்.

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சில் நிலவுகின்ற 7500 வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக கடந்த மார்ச் மாதம் நாடளாவிய ரீதியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதன் பின்னர் கொழும்பில் இரண்டுமுறை நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு தகைமையுடையோர் குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு கடந்த செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி செயற்றிட்ட உதவியாளர்களுக்கான நியமனம் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டது. இருப்பினும் செப்டெம்பர் 18 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நிலையில், தேர்தல் காலம் என்பதாலும் குறித்த நியமனம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலும் குறித்த நியமனத்தை தேர்தல் நிறைவடையும் வரை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக தேர்தல்கள் ஆணைக்குழு மாவட்ட செயலகங்களுக்கு அறிவித்திருந்தது. இதனால் கடமையைப் பொறுப்பேற்கச் சென்ற செயற்றிட்ட உதவியாளர்கள் ஏமாற்றமடைந்திருந்தனர். இந்நிலையில் தற்போது தமக்கு நியமனம் கிடைத்த பின்னர் இரண்டு மாத காலம் பொறுமை காத்த நிலையில் யாழ்.மாவட்ட செயற்றிட்ட உதவியாளர்கள் நாளை 20 ஆம் திகதி புதன்கிழமை யாழ். மாவட்ட செயலகத்திற்கு செல்லவுள் ளதாகத் தெரிவித்தனர். யாழ். மாவட்டத்தில் இருந்து 999 பேருக்கு பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5-30)

# கனவுகளும் பலன்களும்

## கனவுகள் பலிக்குமா?

கனவுகள் மனிதனோடு பின்னிப் பிணைந்தவை.மனத்தில் அமுக்கப்பட்ட ஆசைகள் கனவுகளாகப் பரிணமிக்கும் என்றும் ஆழ்மனதில் புதைந்திருக்கும் எண்ணங்களின் வாசனைகளே கனவுகளுக்குக் காரணம் என்றும் பல்வேறு கருத்துக்கள் உண்டு. முன்னேற வேண்டும் என்று கனவு காணுங்கள் சாதிக்கலாம் என்றும் கூறி வைத்திருக்கிறார்கள் பெரியோர்கள்.

பொதுவாக கனவுகள் உடலில் உள்ள வாதம்,கபம் எனும் மூன்று தாதுக்களின் மாறுபாட்டால் ஏற்படுகின்றன என்பது ஆயுர் வேதத்தின் தீர்ப்பு. நிறைவேறாத ஆசைகளே கனவுகளாக வெளிப்படும் என்பது உலகத்தின் தலைசிறந்த மனோதத்துவ நிபுணர் சிக்மண்ட் புறொய்டின் கோட்பாடு.

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் 25.09.2019 ஆம் திகதியன்று வெற்றிடம் ஏற்பட்டுள்ள யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் (வகை- III) அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடைய அதிபர்கள் குறித்த பாடசாலைக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள்

1. இலங்கை அதிபர் சேவையில் தரம் III தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

2. இலங்கை அதிபர் சேவையில் அதிபராகக் கடமை யாற்றாதவர்களும் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 4 பொருத்தமாகாது)

3.வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

4.விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல்வேண்டும்.

5.விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 26.11.2019 ஆம் திகதியாகும்.

7. விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும்.

8. விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# ஜனாதிபதி கோத்தபாயவுக்கு ஆளுநர் ராகவன் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியசரசின் 7 ஆவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வட மாகாண மக்களுடன் இணைந்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் தனக்கான ஒரு இடத்தை மீள்நிலைநாட்டிக் கொள்வதற்கு புதியதொரு வழிகாட்டலும் தூர நோக்கும் அர்ப்பணிப்பு நிறைந்த கடின உழைப்பும் நமது தாய்நாட்டிற்கு தற்போது தேவையாகவுள்ளது.

இன, மத, அரசியல் பேதமின்றி இலங்கையின் அனைத்து மக்களையும் தனது வெற்றிப் பயணத்தில் இணைத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கு புதிய ஜனாதிபதிக்கு தைரியமும் நம்பிக்கையும் கிடைப்பதற்கு வடமாகாண மக்கள் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றேன். ஜனநாயகம், சமத்துவம் நிறைந்த வளமான ஒன்றுபட்ட இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு வட மாகாண மக்கள் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். நமது தாய் நாடு எப்பொழுதுமே ஆசீர்வதிக்கப்படட்டும்! என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புதிய நிர்வாகத்தை தெரிவு செய்ய கலைஞர்களின் விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்கான கலாசார பேரவை, கலாசார அதிகார சபை என்பவற்றிற்கு புதிய நிர்வாகத்தினரை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் விரைவில் நடத்தப்படவுள்ளது.

கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், இளங்கலைஞர்கள் முதலான எவரும் பொதுச் சபை உறுப்பினர்களாக சேர்ந்து இக் கூட்டத்தில் பங்குபற்றி பிரதேசத்தில் கலை பண்பாட்டு மேம்பாட்டுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பினை நல்க முடியும். எனவே பிரதேச கலாசார பேரவை, கலாசார அதிகார சபை ஆகியவற்றில் இணைந்து செயற்பட ஆர்வமும் ஈடுபடும் உடைய வடமராட்சி வடக்கை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள் தங்களது சுய விபரத்தினை ஒரு பக்கத்திற்கு மேற்படாத வகையில் தயாரித்து பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)



ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் வெற்றியை நாடாளு மன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஆதரவாளர்கள் நேற்று முன் தினம் யாழில் பட்டாசு கொளுத்தி கொண்டாடினர்.

# இராசி பலன்

**மீனம்**: வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்**: வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள்,தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுப செலவுகள் கூடும் நாள்.

**இடபம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்**: இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், தனவரகள் திருப்திகரமாக அமையும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்**: உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற் றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.

**கடகம்**: பயணங்களால் பலனுண்டு, சாமர்த்தியமாக பேசி காரியங்கள் சாதிப்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு பெருமை தரும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்**: உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், களஸ்திர நன்மையுண்டு.

**சிம்மம்**: தொழிலில் ஆக் பூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கும் எண்ணம் உருவாகும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்றுக் கூடும்.

**தனுசு**: திட்டமிட்ட காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் சலிப்புத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**விருச்சிகம்**: எதிர்பார்த்த காரியமொன்று இன்று கைகூடும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு,தொழில் வளர்ச்சிக்கு பெண்வழி ஒத்துழைப்பு கிடைக்கும் நாள்.

**துலாம்**: ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைபபு கிடைக்கும், எதிர் பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதைக்கு வித்திடுவீர்கள்,நல்ல காரியங்கள் நடைபெறலாம்.

**கன்னி**: திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும்,பொது வழியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு,எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இராசி பலன்** – கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | இராசி பலன் கிரகநிலை | | சந் |
| | சந்திராஷ்டமம் உத்தராடம்,திருவோணம் | | |
| சனி, கேது, குரு, | சூரி, சுக் | புத, செவ் | |


19.11.2019
கார்த்திகை 03,செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சப்தமி பிற்பகல் 1.59 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு
8.20 மணிவரை
சுபநேரம்- 10.39-12.09 மணிவரை
இராகுகாலம்-3.09-4.39 மணிவரை

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்











## திருமதி. குழந்தைவேலு திலகவதி

யாழ்.ஏழாலை கிழக்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும் நயினாமடு நெடுங்கேணியை வசிப்பிடமாகவும் இல.125/2 திருவையாறு கிளிநொச்சியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.குழந்தைவேலு திலகவதி அவர்கள் 16.11.2019 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குழந்தைவேலு அவர்களின் அன்பு மனைவியும், ஏழாலையை பிறப்பிடமாகக் கொண்ட பேராம்பிகை, சுப்பிரமணியம், கமலாம்பிகை, குணரட்ணம், செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு சகோதரியும்,

அமிர்தசுரபி (வவுனியா), யோகநாதன் (கனடா), யோகேஸ்வரி (ஆசிரியர் மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம் ஓமந்தை), சிவானந்தகௌரி (ஜேர்மனி), யோகரட்ணம் (கணுக்கேணி மேற்கு), செந்தீசன் (பெல்ஜியம்), சத்தியபாமா (கிளிநொச்சி உப தபால் அதிபர், நயினாமடு) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசாந்தி, சசிகரன், காலஞ்சென்ற சிறிஸ்கந்தராஜா, ஜெயகௌரி, செந்தாமரைச்செல்வி, பரமநாதபிள்ளை சேரன் (கனகபுரம் கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.11.2019 நாளை புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.125/2, திருவையாறு கிளிநொச்சியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-8263)

இல.125/2, திருவையாறு கிளிநொச்சி.

தகவல்:குடும்பத்தினர்.
077 3237 515

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி கோத்தபாயவுக்கு வாழ்த்து தெரிவித்துவிட்டு பதவி விலகினார் ருவான்



(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவும் இராஜினாமா செய்து கொண்டார்.

இந்தத் தகவலை அவர் தனது டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவிட்டார். குறித்த பதிவில் அவர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.



Ruwan Wijewardene
@RWijewardene
Follow

While I congratulate Mr Gotabaya Rajapakse for his victory in the Presidential Election, I will be resigning as State Minister of Defence and Minister of Mass Media. I hope we will be able to build a nation free of division that unites all communities to take this country forward

மேலும் இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல அனைத்துச் சமூகங்களையும் ஒன்றிணைக்கும் பிளவுபடாத ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப முடியுமென தான் நம்புவதாகவும் அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டார்.

7 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து நேற்று முன்தினம் இராஜினாமா செய்து கொண்டார்.

இவரையடுத்து, அமைச்சர்களான மங்கள சமரவீர, ஹரின் பெர்னாண்டோ மற்றும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் அஜித் பி. பெரேரா ஆகியோரும் பதவி விலகுவதாக அறிவித்தனர்.

மேலும், அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம நேற்று முன்தினம் தனது இராஜினாமாக் கடிதத்தை கையளித்தார்.

அதேநேரம், அமைச்சர் கபீர் ஹாசீமும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்தும் அவரது அமைச்சர் பதவியிலிருந்தும் விலகியுள்ளதாக தெரிவித்தார்.

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள பலரும் தற்போது இராஜினாமா செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அனைத்து மக்களும் சமமானவர்கள் என்ற மனப்பதிவை ஏற்படுத்த முன்வாருங்கள்

## கோத்தபாயவுக்கு ஹக்கீம் வாழ்த்து



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அதேவேளையில் எமது கட்சியின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்த எமது ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். நாட்டின் சில பிரதேசங்களில் சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் எங்கள் ஆதரவாளர்கள் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் தங்களது வாக்குரிமையின் பலத்தைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட்டுள்ளமையானது தொடர்ந்தும் எங்களுக்கோர் உந்துசக்தியாக அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

நாடு தழுவிய ரீதியில் அதிகூடிய வாக்களிப்பு வீதம் பதிவாகியுள்ளமையானது பொதுமக்கள் ஜனநாயகத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றது. ஆனாலும் வாக்களிப்பு நடந்த விதம் எமது சமூகங்களுக்கு இடையிலான ஆழமான துருவப்படுத்தலை வெளிக்காட்டுகின்றது.

ஆனாலும் சகல இலங்கையர்களினதும் நலன்கருதிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான கடினமான முடிவுகளை எடுப்பதில் பலத்த சவால்களை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில், சட்டத்தின் ஆட்சி, நாட்டின் பன்முகத்தன்மை மற்றும் ஜனநாயகத்தின் பெறுமதிகள் என்பவற்றை போஷிப்பதற்கான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியுள்ளது. உங்களது நிர்வாகத்தின் கீழ் அமைதி, ஒற்றுமை, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் சகல இனங்களுக்கும் மத்தியில் நிலைத்து நிற்கக் கூடிய நல்லெண்ணம் என்பவற்றுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று நம்புகின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலானது சமூக ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றில் மன்னிக்க முடியாததும், அழிக்க முடியாததுமான வடுவை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய பாரதூரமான அனர்த்தத்தின் உண்மைத் தன்மையை கண்டறிவதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முயற்சிகளில் எதிர்க்கட்சி பங்குபற்றாமை ஒரு கறையாக படிந்துள்ளது. அத்துடன், தேர்தல் பரப்புரைகளின் போது தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் மீது அநீதியானதும், அடிப்படையற்றதுமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதும் வருந்தத்தக்கவை.

எவ்வாறாயினும், தேர்தல் பெறுபேறுகளை உற்றுநோக்குகையில், பெரும்பான்மை மேலாதிக்க மனோபாவமுள்ள நாட்டில் சகல சமூகத்தினரையும் உள்ளடக்கிய ஒன்றுபட்ட தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான புதிய வாய்ப்பொன்று கிட்டியுள்ளது. தேர்தலோடு ஒட்டியதான இனங்களுக்கிடையான துருவப்படுத்தலை நீக்கும் முயற்சிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

வெவ்வேறு சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சந்தர்ப்பமொன்று உங்களுக்கு வாய்த்துள்ளது. இலங்கை முஸ்லிம்களின் அதிகபட்ச ஆணையைப் பெற்ற கட்சி என்ற வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உங்களை வாழ்த்துகின்றது.

வரலாறு அதற்கான சாளரமொன்றை மீண்டும் ஒருமுறை உங்களுக்குத் திறந்து தந்துள்ளது. இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் 2009ஆம் ஆண்டில் யுத்த நிறைவின் பின்னர் உங்களுக்கு முன்னொரு தடவை யும் கிட்டியிருந்தது. உங்களது வெற்றியில் பங்கெடுக்காத சிறுபான்மை மக்களின் கணிசமானோரின் மனங்களை வென்றெடுத்து, இனங்களுக்கிடையிலான இணைப்புப் பாலமாக அமைவதற்கும், குறுகிய வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்து மக்களும் சமமானவர்கள் என்ற மனப்பதிவை ஏற்படுத்துவதற்கும் முன்வருவீர்கள் என்று நம்புகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆறுமுகநாவலர் விழாவும் குருபூசையும்

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, அகில இலங்கை இந்துமா மன்றம், ஈழத்து திருநெறித் தமிழ் மன்றம், இந்து வித்தியாபவிருத்திச்சங்கம் இலங்கை சைவநெறிக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் விழாவும் குருபூசையும் நாளை 20 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். (இ-5)

## மூன்று குழுக்களுக்கிடையே மோதல்

### மூவர் காயம்; ஒருவர் கைது

(புத்தளம்)

புத்தளத்தில் நேற்று முன்தினம் மாலை மூன்று குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் மூவர் காயமடைந்தனர்.

புத்தளம் - மன்னார் பிரதான வீதியிலேயே இந்த மோதல் இடம்பெற்றது. இந்த வன்முறைச் சம்பத்தில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், இரண்டு வான்களையும், மேலும் ஒரு வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வாவியிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

(வாகரை)

மட்டக்களப்பு வாகரைப் பொலிஸ் பிரிவிலுள்ள பனிச்சங்கேணிப் பாலத்தை அண்டிய வாவிப் பகுதியிலிருந்து நேற்று திங்கட்கிழமை பெண்ணொருவரின் சடலத்தை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை மாலை வெளியூரிலிருந்து பேருந்து ஒன்றில் பனிச்சங்கேணிப் பகுதிக்கு வந்திறங்கிய அந்தப் பெண் காணாமல் போயிருந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டார்.

பனிச்சங்கேணிப் பாலத்தை அண்டிய வாவி மருங்கிலுள்ள உல்லாச விடுதியொன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் அந்தப் பெண் வாவியில் குதிப்பதான காட்சி பதிவாகியிருந்ததாக பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் வாகரைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-7)

## ஹாசிம் இராஜினாமா கோத்தாவுக்கு வாழ்த்து



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்தும் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் பதவியிலிருந்தும் கபீர் ஹாசிம் இராஜினாமா செய்துள்ளார்.

விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர் நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு தலைசாய்த்து பொறுப்புக்களிலிருந்து இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

அதேவேளை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கபீர் ஹாசிம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சம்பிக்க இராஜினாமா



(கொழும்பு)

மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்தார்.

இதேவேளை போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் அசோக் அபேசிங்கவும் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2019-16.12.2019

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விகாரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு இணைந்து தன இலாபாதிபதியான குருபகவானும் இருக்கிறார். கேதுவும் தனுசிலேயே சஞ்சரிப்பதால் நல்ல மாற்றங்கள் நிகழவிருக்கிறது. பொருளாதாரத்தில் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். அருளாளர்களின் ஆலோசனைகளும், ஆன்றோர்களின் வழிகாட்டுதலும் பொருள்வளத்தைப் பெருக்கிக் கொடுக்கும். புதிய முயற்சிகளில் வெற்றியையும் தேடித் தரும் விதத்திலேயே இம்மாதக் கிரக நிலைகள் இருக்கின்றன.

இலாப ஸ்தானம் பலம்பெற்றிருக்கும் இந்த நேரத்தில் அவரோடு இராசிநாதன் சனியும் சேர்ந்திருப்பது மிகுந்த யோகமாகும். எனவே இராஜயோக அமைப்பில் எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் உங்களுக்கு வரலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களாக இருந்தால் நீண்ட நாட்களாகக் கிடைக்காத ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் தானாக வந்து சேரும். படிப்பிற்கேற்ற வேலை இல்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது எதிர்பார்த்த நல்ல வேலை கிடைக்கப்போகிறது. மேலும் 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான 2 கிரகங்கள் தங்கள் வீடுகளை மாற்றிக்கொண்டு பரிவர்த்தனை யோகம் பெறுகிறார்கள். அதாவது 9இற்கு அதிபதியான சுக்கிரன் 10 ஆம் வீட்டிலும், 10இற்கு அதிபதியான செவ்வாய் 9ஆம் வீட்டிலுமாக பரிவர்த்தனை பெறுகிறார்கள்.

9ஆம் இடம் என்பது பிதுரார்ஜித ஸ்தானம் என்று சொல்லப்படும் இடமாகும். 10ஆம் இடம் என்பது தொழிலைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் இடமாகும். எனவே தந்தை வழியில் உங்கள் தொழிலுக்கு ஒத்துழைப்பு கிடைக்கலாம். பங்காளிப் பகை மாறும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரப் பொறுப்புகள் கிடைக்கலாம். இடம், பூமியால் இலாபம் உண்டு. என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம், இப்பொழுது பலமடங்கு விலை உயர்ந்து உங்கள் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

இம்மாதம் முருகப்பெருமானுக்கு உகந்த திருக்கார்த்திகைத் திருநாள் வருகிறது. அன்றைய தினம் முருகப்பெருமானை முறையாக வழிபட்டு வருவதோடு கவசப் பாராயணங்களை படிப்பதன் மூலம் கடமையில் இருந்த தொய்வு அகலும். காரியங்களில் வெற்றி கிடைக்கும். பொதுவாகவே குரு உங்களுக்கு நன்மை செய்யும் கிரகம் என்பதால் தெய்வீக நாட்டம் அதிகரிக்க, அதிகரிக்க தித்திக்கும் விதத்தில் வாழ்க்கை அமையும்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் மாதத் தொடக்கத்தில் விருச்சிக இராசியில் இருக்கிறார். நவம்பர் 22 ஆம் திகதி தனுசு இராசிக்கு செல்கிறார். இதன் விளைவாக தொழில் வளர்ச்சி சிறப்பாகும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும். வீடுகட்டும் முயற்சியில் இருந்த தடை அகலும். பத்திரப்பதிவில் இருந்த சிக்கல்கள் விலகும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக பஞ்சாயத்துக்கள் வைத்தும் பல நாட்களாக முடிவடையாமல் தாமதமாக இருக்கின்றதே என்று கவலைப்பட்டவர்களுக்கு சாதகமான பலன் வரப் போகிறது.

விருச்சிக புதன் சஞ்சாரம்

இதுவரை துலாம் இராசியில் சஞ்சரித்து வந்த புதன், இப்பொழுது டிசெம்பர் 3 ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் செல்லப் போகிறார். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் இப்பொழுது தொழில் ஸ்தானத்திற்கு வரப்போகிறார்.




எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் நிலை உருவாகும். பங்குதாரர்களால் ஏற்பட்ட கலக்கம் அகலும். புதிய தொழில் தொடங்குவது பற்றிய சிந்தனை மேலோங்கும். நண்பர்கள் கூட்டாகச் சேர்ந்து தொழில் செய்யலாம் என்று ஒரு நல்ல கருத்தைத் தெரிவிப்பர். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே

## தொழில் வளம் மேலோங்கும் நேரம்

நடைபெறும். உங்கள் இராசிநாதன் சனி உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லை மட்டும் அடிக்கடி வந்து அலைமோதும். சனி மற்றும் கேது ஆகிய இரண்டு கிரகங்களின் பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் அஜீரணத் தொல்லைகளும், எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட தொல்லைகளும் வந்து கொண்டேயிருக்கும். நோய்க்கான அறிகுறிகள் தென்படும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. ராகு - கேதுக்கள் ஆதிக்கம் உங்கள் இராசிக்கு பாக்கிய ஸ்தானத்திலும், இலாப ஸ்தானத்திலுமாக இருக்கிறது. 5ஆம் இடத்தில் ராகு இருப்ப தால் பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பிள்ளைகள் வழியில் விரயங்களும் உருவாகும். எனவே பிள்ளைகளை உங் கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. இளைய சகோதரத் தோடு இணக்கம் ஏற்படலாம்.

இம்மாதம் வியாழன் தோறும் நவக்கிரகத்தில் உள்ள குருபகவானை வழிபடுவதோடு பிரதோஷ காலத்தில் நந்தியையும் வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் பிரச்சினைகள் தீர வழிவகுத்துக் கொடுப்பர். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். வாழ்க்கைத் துணையின் வேலை சம்பந்தமாக முயற்சிகள் செய்திருந்தால் அந்த முயற்சி கை கூடும். அதன்மூலம் உதிரி வருமானங்கள் கிடைக்கலாம். தாய்வழி ஆதரவு திருப்திகரமாக இருக்கும்.

இதுவரை விலகியிருந்த உடன் பிறப்புகள் இப்பொழுது பகை மறந்து பேச முன் வருவர். சூரிய பலம் நன்றாக இருப்ப தால் பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். அதில் புதிய பொறுப்புகளும் கிடைக்கலாம். பணி புரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வீடு வாங்கி குடியேறும் யோகம் உண்டு. வேறு வேலைக்கு மாற்றிக் கொள்ளலாம் என்ற எண்ணம் இப்பொழுது அகலும். இருக்குமிடத்திலேயே சம்பள உயர்வு கிடைத்து சந்தோஷப்படுவீர்கள். குலதெய்வ வழிபாடும், நந்தீஸ்வரர் வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

விகாரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் 10ஆம் இடத்தில் சொந்த வீட்டில் தனுசு இராசியில் சஞ்சரிக்கிறார். மேலும் அவரோடு இணைந்து சனி, கேது ஆகிய கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. 10 ஆம் இடம் "தொழில் ஸ்தானம்" என்றும், "கர்ம ஸ்தானம்" என்றும் அழைக்கப்படுகிறது. எனவே 10இல் குரு வருவதால் பதவி மாற்றங்கள், இடமாற்றங்கள், தொழில் மாற்றங்கள் உறுதியாவதற்கான அறிகுறிகள் தென்படும். வரும் மாற்றங்களை நீங்கள் தவிர்க்க இயலாது. நீண்ட தூரப் பயணங்களாகவும் இருக்கலாம். மிக அருகாமையிலுள்ள இடமாகவும் இருக்கலாம். மிகுந்த யோகமானவர்கள் திசாபுத்தி பலம் பெற்றவர்களாக இருந்தால் பணிபுரியுமிடத்திலேயே இலாகா மாற்றங்கள் அல்லது உட்காரும் இடத்திலேயே இடமாற்றங்கள் ஏற்படலாம்.

அதே நேரத்தில் 10இல் சனி இருப்பதால் பெற்றோர் களின் ஆரோக்கியத்தில் தொல்லைகள் அதிகரிக்கலாம். மருத்துவச் செலவுகள் ஏற்படும். அதேபோல் சுயதொழில் செய்பவர்களுக்கு பழைய பங்குதாரர்களால் தொல்லைகள் ஏற்பட்டு அவர்களை விலக்கிவிடும் நிர்ப்பந்தம் ஏற்படலாம். தொழிலில் மிகுந்த விழிப்புணர்ச்சி தேவைப்படும் நேரம் இது. ஒரு சிலருக்கு கவனத்துடன் செயற்பட்டால் ஓரளவு லாபம் கிடைக்கும். ஒரு சிலருக்கு ஏட்டில் இலாபம் இருக்குமே தவிர எதிரில் வந்து சேராது. எனவே கூட்டுத் தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளிடம் மிகுந்த கவனமுடன் இருந்தால் தான் ஆதாயத்தை அங்கீகரித்துக் கொள்ள முடியும்.

9ஆம் இடத்தில் சூரியனும், சுக்கிரனும் இணைந்திருக்கிறார்கள். செவ்வாய் வீட்டில் சுக்கிரனும், சுக்கிரன் வீட்டில் செவ்வாயும் சஞ்சரிப்பதால் பரிவர்த் தனை யோகமும் பெறுகிறார்கள். யோகங்களில் சிறப்பான யோகம் பரிவர்த்தனை யோகமாகும். ஆனால் அதே நேரம் 8ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்கிரன் 9ஆம் இடத்திலும், 9ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாய் 8ஆம் இடத்திலுமாக சஞ்சரிக்கிறார்கள். எனவே பெற்றோர் வழியில் ஒரு சிலருக்கு பிரச்சினைகள் ஏற்படலாம். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியவில்லையே என்று கவலைப் படுவீர்கள். சிலருக்கு சொத்து விற்பனையின் மூலம் வரவேண்டிய தொகை வராமலும் போகலாம். இருப்பினும் உடன்பிறப்புகளை பகைத்துக்கொள்ள வேண்டாம்.

இம்மாதம் முருகப்பெருமானுக்கு உகந்த திருக்கார்த்திகைத் திருநாள் வருவதால்,




## உத்தியோக மாற்றம் உறுதியாகலாம்

அன்றைய தினம் கவச பாராயணம் செய்து வெற்றி வடிவேலனை வழிபட்டால் வெற்றிகள் வந்து குவியும்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் நவம்பர் 22 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்திற்கு வரப்போகிறார். அங்குள்ள குருவோடு பகைக்கிரகமான சுக்கிரன் இணையும் பொழுது, முரண்பாடான பலன்கள் நடைபெறும். நடக்காது என்று நினைத்த காரியங்கள் நடைபெறும். நடைபெறும் என்று நினைத்த காரியங்கள் தாமதப்படலாம். என்னயிருந்தாலும் குரு வீடு என்பதால் குருவழிபாட்டை மேற்கொண்டால் கூடுதல் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம். கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரலாம்.

விருச்சிக புதன் சஞ்சாரம்

இதுவரை மாதத் தொடக்கத்தில் துலாம் இராசியில் புதன் சஞ்சரித்து வந்தார். அவர் டிசெம்பர் 3 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 4 இற்கு அதிபதி 9இல் வரும்பொழுது உங்களுக்கு நன்மைகள் அதிகம் நடைபெற வேண்டும். எனவே நீண்ட நாட்களாக பேசிப்பேசி விட்டுப்போன சுபகாரியப் பேச்சுக்கள் இப்பொழுது நல்ல முடிவிற்கு வரும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். கல்யாண காரியம் முதல் கட்டடம் கட்டும் பணி வரை சுபச்செலவுகளாக வந்து கொண்டேயிருக்கும். வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்பட்டுப் புதிய வாகனம் வாங்கலாமா என்று சிந்திப்பீர்கள். என்னயிருந்தாலும் புதனுக்குரிய தெய்வமாக விளங்கும் மகா விஷ்ணுவையும் அவரது துணைவியான மகாலட்சுமியையும் வழிபட்டால் மனக்கவலை மாறும். பணக்கவலையும் தீரும். புதன் மாமன்காரகன் என்றும், கல்விக்குரியவன் என்றும் கருதப்படுவதால் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் சிறப்பாக இருக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். இம்மாதம் தினந்தோறும் விநாயகப்



பெருமானையும், வியாழன் தோறும் குருபகவானையும் வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

நிதானத்தோடு செயல்பட வேண்டிய மாதம் இதுவாகும். நிகழ்காலத் தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும். வரவை மீறிய செலவுகள் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாக அமையாது. சேமிப்பில் சிறிது கரையலாம். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. அதனால் ஒற்றுமையைப் பலப்படுத்திக் கொள்ள இயலும்.

வீண் விரயங்களில் இருந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள். தாய் வழித் தனலாபம் திருப்திகரமாக இருக்கும். சகோதர வர்க்கத்தினர் உங்களை அனுசரித்துச் செல்வார்களா என்பது சந்தேகம் தான். இடம், பூமி வாங்குவதாக இருந்தால் பத்திரப் பதிவில் கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வரலாம். பணிபுரியும் பெண்கள் மேலதிகாரிகளிடம் சலுகைகளை எதிர்பார்க்க இயலாது. வராகி வழிபாடு வளர்ச்சியைக் கொடுக்கும். மாதக் கடைசியில் மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவு.விவசாயக் கல்லூரி வளாகத்தில்

# படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினைவு தினம் அனுஷ்டிப்பு





(நெளுக்குளம்)

வவுனியா விவசாய கல்லூரி வளாகத்தில் கடந்த 18.11.2006 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் 13ஆம் ஆண்டு நினைவு தினம் வவுனியா விவசாயக் கல்லூரியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. கல்லூரியின் மாணவர் ஒன்றியத்தால் அனுஷ்டிக்கப்பட்ட இந்நிகழ்வில் உயிரிழந்தவர்களின் திருவுருவப் படத்திற்கு நினைவுச் சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினைவாக இரத்ததான நிகழ்வு ஒன்று விவசாயக்கல்லூரி மாணவர்களால் நடத்தப்பட்டதுடன், அவர்களின் நினைவாக மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன. குறித்த சம்பவத்தில் சங்கரலிங்கம் கிந்துஜன், சித்திரவேல் கோபிநாத், இராமச்சந்திரன் அச்சுதன், சித்திக்காசன் றிஸ்வான், சுந்தரலிங்கம் ஐங்கரன், திருநாமம் சிந்துஜன் ஆகியோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (9-299)

## முல்லை. தென்னியன்குளம் பகுதியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள வழிவகை செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு தென்னியன்குளம் பகுதியில் உள்ள மூங்கில் குளம், உயிலடி, பாலமோட்டைக் குளம் ஆகியவற்றைப் புனரமைத்து அதன்கீழான வயல்நிலங்களை பயிர்ச்செய்கைகளுக்கு உட்படுத்த வழிவகை செய்து தரவேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்கு உட்பட்ட தென்னியன்குளம் பகுதியில் தற்போது 125 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தரமாக வசித்து வருகின்றன. இந்த நிலையில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள தென்னியன்குளத்தின் கீழ் தற்போது 916 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருந்தபோதும் குறித்த கிராமத்தில் நெற்செய்கைக்குரிய சொந்தக்காணிகள் இன்றி கூடுதலான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் தென்னியன்குளம் பிரதேசத்திற்கு உட்பட்ட பெரியமாவில் பகுதியில் உள்ள 150 ஏக்கர் வரையான நிலப் பரப்பில் 80 ஏக்கர் வரையான பகுதிகள் மாத்திரமே பயிர்ச்செய்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனைவிட, உயிலடி, பாலமோட்டைக்குளம்,மூங்கில்குளம் ஆகிய குளங்கள் கைவிடப்பட்ட குளங்களாகவும் அதன் கீழான வயல்நிலங்கள் மற்றும் பெரிய மாவில் பகுதியில் ஒரு பகுதி வயல் நிலங்கள் கைவிடப்பட்ட நிலங்களாகவும் காணப்படுகின்றன. எனவே குறித்த குளங்களை புனரமைத்து அதன் கீழான வயல் நிலங்களை தமக்கு பகிர்ந்தளிக்குமாறு காணியற்ற விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## கைவிடப்பட்ட நிலையிலுள்ள கிளி.மத்திய பேருந்து நிலையம்

### பொதுமக்கள் பெரும் அசௌகரியம்



(அக்கராயன்)

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 10 வருடங்கள் கடந்தும் கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரைக்கும் நிரந்தரமான பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படவில்லை என பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட போதும் அதன் பணிகள் நிவர்த்தி செய்யப்படாது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தேநீர்க்கடைகள் உட்பட பல உணவுப் பண்டங்களை விற்பனை செய்யும் கடைகள் காணப்படுகின்றன. தற்போது மழைநீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதோடு, சுகாதாரச் சீர்கேட்டையும் ஏற்படுத்தி வருகிறது.

சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு நிரந்தர பேருந்து நிலையம் இல்லாமை பயணிகள் மழை நேரங்களில் பாதுகாப்பாக ஒதுங்கி நிற்பதற்குக்கூட இடம் இன்றி அவதிப்படுவதனையும் காணக்கூடியதாக உள்ளது.

இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள பேருந்து நிலையத்தை முழுமையாக அமைத்து முடிப்பதற்கு மாவட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் முதல் அதிகாரிகள் வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே மாவட்டத்தின் நலன் கருதி குறித்த பேருந்து நிலையத்தை விரைவாக அமைத்து முடிப்பதற்கு உரிய தரப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(9-350)

# தரச் சான்றிதழ் வழங்காத நகைக்கடைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## மன்.பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை எச்சரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள சில நகைக்கடைகளில் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்படுவதாகவும் நகைகளை பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடுகள் இன்மையால் மக்கள் ஏமாற்றப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் உள்ள சில நகைக் கடைகளில் நகைகளை மக்கள் கொள்வனவு செய்யும் போதும், அதே நேரத்தில் பழைய நகைகளை அழித்து புதிய நகைகளை செய்யும் போதும் 22 கரட் நகையாக செய்து தருவதாக கோரி பணம் பெறப்படுகின்ற போதும் 18 தொடக்கம் 21 கரட் பவுண்களிலே நகைகள் செய்யப்பட்டு மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னாரில் தங்க நகைகளை தங்கத்தின் தரத்தை பரீட்சித்து பார்க்கக்கூடிய வசதி உள்ள நகைக்கடைகளும் ஏனைய நகைக்கடை உரிமையாளர்களுடன் தொடர்பு வைத்திருப்பதால் நகைகளின் தரத்தை பரீட்சித்து கொடுப்பதற்கு மறுப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அவசர பண தேவைகளுக்காக நகைகளை அடகு வைக்க வங்கிகள் மற்றும் தனியார் அடகு பிடிக்கும் நிலையங்களுக்கு கொண்டு செல்லும் போதே நகையின் தரம் தொடர்பான உண்மை நிலை தெரிய வருவதாகவும் அதன் பின்னர் சம்பந்தப்பட்ட நகைக்கடை உரிமையாளர்களிடம் சென்று கேட்கும் போது காலம் சென்று விட்டது இனி ஒன்றும் செய்ய முடியாது எனத் தெரிவிப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது குறித்து மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரிடம் கேட்ட போது,

மன்னாரில் தங்க நகைகளை விற்பனை செய்யும் போது நகையின் தரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு தங்க நகைகளை கொள்வனவு செய்யும் போது தங்கத்தின் தரத்தை உறுதிப்படுத்திய பற்றுச்சீட்டு வழங்கப்படாத நிலையில் தங்க நகை கொள்வனவு செய்யப்பட்டதில் இருந்து 90 நாட்களுக்குள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்ய வேண்டும்.

அவ்வாறு முறைப்பாடு பதிவு செய்யும் பட்சத்தில் குறித்த நகைத் தொழிலகம் மற்றும் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரச்சபையினர் தெரிவித்துள்ளனர். (9-285)




# பெரியகுளம் பாடசாலையை இயங்க வைக்குமாறு வேண்டுகோள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு பெரியகுளம் பாடசாலையை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை மேற்கொள்ள வேண்டுமென பெரியகுளம் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். 1984 ஆம் ஆண்டு பெரியகுளம் கிராமத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து இருந்தனர். அன்றிலிருந்து பெரியகுளம் பாடசாலை பிற இடங்களில் இயங்கி வருகின்ற போதிலும் சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை வலயக் கல்விப் பணிமனை மேற்கொள்ளவில்லை. பாடசாலையினை சொந்தக் கிராமத்தில் இயங்க வையுங்கள் என துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையில் பல தடவைகள் முறைப்பாடுகள் செய்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட போதிலும் துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையின் அதிகாரிகள் பெரியகுளம் கிராமத்திற்கு வருகை தருவதாக தெரிவித்த போதிலும் இதுவரை அதிகாரிகள் கிராமத்திற்கு வரவில்லை.

பெரியகுளம் பாடசாலை எமது சொந்தக் கிராமத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளிடம் கிராம மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (9-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் புதிய ஜனாதிபதி மக்கள் மனங்களை வெல்ல வேண்டும்

## ரெலோ தெரிவிப்பு

(நெளுக்குளம்)

**புதிய ஜனாதிபதி ஒட்டுமொத்த நாட்டின் ஜனாதிபதி என்பதனை ஏற்றுக்கொண்டு மக்கள் மனங்களை வெல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தெரிவித்துள்ளது.**



இவ் விடயம் தொடர்பாக கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்று ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார்.

இத்தேர்தலின் முடிவுகள் தமிழ் மக்கள் தமது ஜனநாயக கடமையை ஒற்றுமைப்பட்டு வெளிப்படுத்தியுள்ளமையும் என்னென்ன காரணங்களுக்காக சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்க வேண்டுமென தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) மக்களை உரிமையோடு கேட்டுக்கொண்டதோ அக் காரணங்கள் அனைத்தும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதையும் வெளிப்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்களின் உணர்வுகளும்,உள்ளக்கிடக்கைகளும் ஒவ்வொரு வாக்குகளினாலும் உலகத்துக்கு உணர்த்தப்பட்டுள்ளது.

எமது மக்களின் நீண்டகால அபிலாஷைகள், தீர்த்துவைக்கப்படாத அன்றாடப் பிரச்சினைகள், கேள்விகளுக்குள்ளாக்கப்பட்டுள்ள எதிர்கால வாழ்வு என இவையெல்லாம் ஏமாற்றங்களாகத் தொடர்வதன் நீட்சியே வாக்குகளூடாக பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பெரும்பான்மை சிங்கள மக்களின் நிலைப்பாடானது தமிழ் மக்களின் நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. காலம்காலமாக சிங்கள தலைமைகள் தமிழ் மக்களின் உணர்வுகளையும், கோரிக்கைகளையும் ஏமாற்றிக் கொண்டிருப்பதும் உதாசீனப்படுத்துவதும் தெரிந்தும் பெரும்பான்மை இனம் துணை நிற்பது வருத்தமானதே. சிங்களத் தலைமைகள் சிங்கள பெரும்பான்மை மக்களை தவறாக வழி நடத்திக்கொண்டு அரசியல் நன்மைகளை அனுபவிக்கவே விரும்புகின்றார்கள். ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிங்கள தேசம் அனுபவிக்கின்ற அனைத்து உரிமைகளையும் தமிழ் மக்களும் அனுபவிக்கவேண்டும் என கோருவதில் தவறொன்றும் காணமுடியாது. புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவும் சிங்கள மக்களும் இதைப் புரிந்துகொள்ளவேண்டும். தமிழ் மக்களதும் தெற்கின் சிங்கள மக்களதும் சமகாலத்து வேணவாக்கள் வேறு வேறானவை என்பது தேர்தல் முடிவுகளில் பிரதிபலிக்கின்றன. வெவ்வேறான பார்வைகளினூடாகவும், அணுகுமுறைகளினூடாகவுமே தமிழ்- சிங்கள மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்க்கப்படவேண்டும். புதிய ஜனாதிபதி தனது 5 வருட பதவிக் காலத்தில் இயலுமான வரை கடந்த அரசாங்கங்கள் விட்ட தவறுகளை பாடமாக்கிக்கொண்டு திருத்தங்களுடன் பயணித்தால் நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் வாழ்வுண்டு.

இந்நிலையில் தமிழ் மக்களின் எண்ணச் சிந்தனைகளை ஏற்றுக்கொண்டு இரு பிரதான வேட்பாளர்களில் சிறந்தவர் யாரென எமது மக்களிடம் நாம் கூற அதை சிரமேல் ஏற்று தமிழர் ஒற்றுமையை மீண்டும் ஒருதடவை நிரூபித்துக் காட்டிய எமது உறவுகளுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துகொள்கின்றேன்.

மேலும் பெரும்பான்மை தமிழ் மக்களால் கோத்தபாய ராஜபக்ஷ நிராகரிக்கப்பட்டாலும் இன்னுமொரு பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவருக்கே தமிழ் மக்கள் வாக்களித்திருந்தார்கள். இது அரசியல் ரீதியான முடிவே தவிர இன ரீதியானதல்ல என்பதை புரிந்தவராக புதிய ஜனாதிபதி ஒட்டுமொத்த நாட்டின் ஜனாதிபதி என்பதனை ஏற்றுக்கொண்டு மக்கள் மனங்களை வெல்ல நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-299)




# போதிய மழை இல்லாததால் விவசாயிகள் நெருக்கடியில்

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் குளங்களின் நீர் மட்டம் அதிகரிக்காததன் காரணமாக நீர்ப்பாசனம் மேற்கொள்வதில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளம் 09 அடி 05 அங்குலத்தில் காலபோக நெற்செய்கைக்காக திறந்து விடப்பட்டது. காரணம் பசளையிடல், மருந்து வீசுதல் என்பவற்றிற்கு குளத்தின் நீர் திறந்து விடப்பட்டது.

ஆனால் மழை வீழ்ச்சி இடம் பெற்று குளத்தின் நீர் மட்டம் அதிகரிக்காததால் நீர்ப்பாசன முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக குளத்தின் கீழுள்ள நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

குளத்தில் காணப்படுகின்ற குறைந்தளவிலான நீர் அனைத்து வயல் நிலங்களுக்கும் நீர்ப்பாசனம் மேற்கொள்ள முடியாது இருப்பதாகவும் இதன் காரணமாக ஐம்பது ஏக்கருக்கு மேற்பட்ட நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குளத்தின் நீர் மட்டம் அதிகரிக்கப்பட வேண்டும். வழமையாக அக்கராயன் குளத்தின் நீர் மட்டம் இக்காலத்தில் 10 அடி தாண்டியதாக இருக்கும். தற்போது 10 அடியின் கீழ் குளத்தின் நீர் மட்டம் காணப்படுகின்றது எனவும் தெரிவித்தார். பொதுவாக கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து குளங்களின் நீர் மட்டம் தற்போது குறைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-350)

# வடக்கில் பால் சோறு வழங்கிக் கொண்டாட்டம்





(முறிகண்டி)

நாட்டின் புதிய ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ நேற்று பதவியேற்றதை முன்னிட்டு வடக்கில் பல்வேறு இடங்களில் அவரது ஆதரவாளர்கள் பாற்சோறு வழங்கியும், வெடி கொளுத்தியும் தமது வெற்றியைக் கொண்டாடினர்.



பொதுஜன பெரமுன கட்சியின் ஏற்பாட்டில் கிளிநொச்சி ஏ-9 வீதி, வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமை காரியாலயத்திற்கு முன்பாக மற்றும் மன்னாரீர் பஸார் பகுதி போன்றவற்றில் நேற்று பாற்சோறு வழங்கி,வெடிகௌுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதில் கட்சியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (9-100-250-285)

# கல்மடுநகர் றங்கன் குடியிருப்பு பகுதிகளில் யானைவேலி அமைத்துத்தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கல்மடுநகர், றங்கன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் தினமும் ஏற்படும் யானைத் தாக்கத்தைத்தடுக்கும் வகையில் ஆறு கிலோமீற்றர் நீளமான யானைவேலி அமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கல்மடுநகர், நாவல்நகர், றங்கன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் தொடரும் காட்டு யானைகளின் தொல்லையால் மேற்படி கிராம மக்கள் அன்றாடம் பெரும் சிரமங்களையும் உயிராபத்துக்களையும் எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

அதாவது அன்றாடம் இரவு வேளைகளில் காட்டு யானைகள் ஊர் மனைகளுக்குள் புகுந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறு யானைகளால் தினமும் தாங்கள் பாதிக்கப்படுவதாகவும் யானைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி அண்மையில் யானைகளால் அழிக்கப்பட்ட பயிர்களை எடுத்து வந்து கண்டாவளைப் பிரதேச செயலகம் முன்பாகவும் மாவட்டச் செயலகம் முன்பாகவும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

ஆனால் இதுவரை எந்தத் தீர்வுகளும் இல்லை என குறிப்பிட்ட பிரதேச மக்கள் தமது பிரதேசத்தை யானைத்தாக்கத்தில் இருந்து பாதுகாக்குமாறும் அதற்கு ஏற்ற வகையில் தமது கிராமங்களை அண்மித்த காட்டுப்பகுதிகளில் ஆறு கிலோமீற்றர் நீளமான யானை வேலிகளை அமைத்துத்தருமாறு கோரியுள்ளனர். (9-315)



இந்துக்களால் முன்னெடுக்கப்படும் சபரிமலை சுவாமி ஐயப்பன் விரத பூஜை வவுனியா தாண்டிக்குளம் ஐயனார் ஆலயம் மற்றும் உக்குளாங்குளம் பிள்ளையார் ஆலயத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது மணி குருசாமி மற்றும் கிருஸ்ணா குருசாமிகளினால் ஐயப்ப சாமிகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டதுடன் விசேட பூஜை நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. (படங்கள்-நெளுக்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட சிறுவன்; மீட்க முயன்றவரும் பரிதாபமாக உயிரிழப்பு

(தேனி)

தேனி மாவட்டம் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட சிறுவனைத் தேட முயன்ற அவரது உறவினரும் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டார்.

கொட்டகுடி ஆற்றில் மூன்று சிறுவர்கள் குளித்துக் கொண்டிருந்தனர். நீரோட்டம் சற்று அதிகமாக இருந்த நிலையில் முத்தரசன் என்ற சிறுவன் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டான்.

இது குறித்து தகவல் அறிந்த சிறுவனின் சித்தப்பா பரமசிவம் என்பவர் தீயனைப்புத்துறையினர் வருவதற்குள் அண்ணன் மகனைத் தேடும் நோக்கில் ஆற்றில் குதித்துள்ளார்.

ஆனால் அவரும் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது. 2 மணி நேர தேடுதலுக்கு பிறகு சிறுவன் முத்தரசனின் சடலம் மீட்கப்பட்டது. பரமசிவத்தைத் தேடும் பணியில் தீயணைப்புத்துறையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (2)

## நவாஸ் ஷெரீப் வெளிநாடு செல்வதற்கான தடை நீங்கியது!

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் நீண்ட சர்ச்சைகளுக்கு பின்னர் மருத்துவ சிகிச்சைக்காக இன்று செவ்வாய்க்கிழமை லண்டன் நகருக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல் வழக்கில் சிக்கியிருந்த அவருக்கு சுகவீனம் ஏற்பட்டதையடுத்து சிகிச்சைகளை பெறுவதற்காக பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இருந்த போதும் லண்டனுக்குச் சென்று சிகிச்சை பெற்றால் மட்டுமே அவரது உடல்நிலை வழமைக்கு திரும்பும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

எனினும், வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் இருந்து அவரது பெயரை பாகிஸ்தான் அரசாங்கம் நீக்காத நிலையில், அவர் லண்டன் செல்வதில் சிக்கல் எழுந்தது. நவாஸ் ஷெரீப் லண்டன் செல்ல வேண்டுமானால் பாகிஸ்தான் பெறுமதியின் படி 1,500 கோடி ரூபாவுக்கான உறுதிமொழி பத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்ற சில நிபந்தனைகளை பிரதமர் இம்ரான்கானின் அரசாங்கம் விதித்திருந்தது.

குறித்த நிபந்தனைகளை ஏற்க மறுத்த நவாஸ் ஷெரீப் இது தொடர்பாக லாகூர் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த நீதிபதிகள் எந்தவித நிபந்தனையும் இன்றி நவாஸ் ஷெரீப்பின் பெயரை வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் இருந்து நீக்க அரசுக்கு உத்தரவிட்டனர். இதன் மூலம் அவர் லண்டன் செல்வதில் இருந்த தடை நீக்கப்பட்டது. இந்த நிலையில், நவாஸ் ஷெரீப், சிகிச்சைக்காக இன்று செவ்வாய்க்கிழமை லண்டன் புறப்பட்டுச் செல்வார் என பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், "அனைத்து வகையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களை கொண்ட நோயாளர் காவு வானூர்தியில் அவர் லண்டன் செல்கிறார்" என குறிப்பிட்டார்.

அத்துடன் அவர், "சிறிது காலம் லண்டனில் தங்கி சிகிச்சை பெறும் நவாஸ் ஷெரீப், அதன் பின்னர் சிகிச்சைக்காக அமெரிக்கா செல்ல வாய்ப்பு உள்ளது" என்று தெரிவித்தார். (2)

## பெற்றோல் விலை உயர்

## ஈரானில் மக்கள்

### வன்முறையில் சிக்கி 38 பேர் பலி

(டெஹ்ரான்)

ஈரானில் பெற்றோல் விலை உயர்வை கண்டித்து மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் 38 பேர் உயிரிழந்தனர்.

உலகிலேயே பெற்றோல் விலை குறைவாக இருக்கும் நாடுகளில் ஈரானும் ஒன்று. இதற்கு முக்கிய காரணம் அங்கு அதிகளவில் பெற்றோல் உற்பத்தி செய்யப்படுவதால் அதற்கான மானியமும் அதிகமாக வழங்கப்படுவது தான்.

இந்த நிலையில் அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து விலகியதற்கு பின், ஈரான் மீது அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்ததால் அந்த நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில் பெற்றோல் மீதான மானியத்தை ஈரான் அரசு நீக்கியதனால் பெற்றோல் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

மானியம் நீக்கி விற்கப்படும் பெற்றோலில் இருந்து வரும் வருமானம் ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என அரசு கூறுகிறது. இதுபற்றி ஜனாதிபதி ஹசன் ருஹானி கூறுகையில், "75 சதவீத ஈரானியர்கள் கஷ்டத்தில் உள்ளனர். இந்த கூடுதல் வருமானமானது அவர்கள் நலனுக்காகச் செலவு செய்யப்படும்" என்றார்.

எனினும் பெற்றோல் விலை உயர்வைக் கண்டித்து மக்கள் போராட்டத்தில் குதித்தனர். தலைநகர் டெஹ்ரான் உட்பட பல்வேறு நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் வன்முறை


## ராஜஸ்தானில் பேருந்து-லொ

### • 10 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(ராஜஸ்தான்)

ராஜஸ்தான் மாநிலத்தில் பேருந்தும் லொறியும் மோதி விபத்துக்குள் ளானதில் 10 பேர் உயிரிழந்தனர்.

ராஜஸ்தான் மாநிலம் பிகானர் மாவட்டம், ஸ்ரீதங்கர்கர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் நேற்றுக் காலையில் பயணிகளை ஏற்றிக் கொண்டு ஒரு பேருந்து சென்று கொண்டிருந்தது. அப்போது அதே பாதையில் வந்த லொறி, பேருந்தின் மீது திடீரென மோதியது. கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த இந்த விபத்தில் இரண்டு வாகனங்களும் கடுமையாக சேதமடைந்



## ஜோர்ஜியாவில் பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு எதிர்க்கட்சியினர் தீவிர போராட்டம்

(திபிலிசி)

ஜோர்ஜியாவில் பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு எதிர்க்கட்சியினர் நடத்தி வரும் போராட்டத்தினால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ஜோர்ஜியாவில் தேர்தல் சீர்திருத்த நடவடிக்கை தொடர்பான வாக்குறுதியை நிறைவேற்றாத ஆளுங்கட்சிக்கு (ஜோர்ஜியன் ட்ரீம்) எதிராக எதிர்க்கட்சியினர் தொடர்ந்து போராட்டம் நடத்தினர். தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால் ஆளுங்கட்சி எம்.பிக்கள் பலர் எதிர்த்து வாக்களித்ததால் இந்தத் தீர்மானம் தோல்வியடைந்தது.

இதனையடுத்து எதிர்க்கட்சியினர் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர். வாக்குறுதியை நிறைவேற்றாத அரசு பதவி விலகி, முன் கூட்டியே பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தலைநகர் திபிலிசியில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகின்றனர்.



அவர்களுடன் பல்வேறு அரசு சாரா அமைப்புகளும் போராட்டத்தில் பங்கேற்றுள்ளன.

பாராளுமன்றத்தை நோக்கிச் சென்ற போராட்டக்காரர்கள், பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர். பாராளுமன்றத்திற்கு வரும் அனைத்து வீதிகளையும் மறித்து பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

அரசு அலுவலகங்களுக்கு இடையூறு ஏற்படுத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என உள்துறை அமைச்சர் எச்சரித்தும் போராட்டக் காரர்கள் கலைந்து செல்லவில்லை. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...வைக் கண்டித்து
# ...போராட்டம்



வெடித்தது.

மத்திய மாகாணமான சிர்ஜானில் உள்ள பெற்றோல் கிடங்குகளை போராட்டக்காரர்கள் சூறையாடி னர்.

அப்போது ஏற்பட்ட வன்முறையில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 38 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். (2)

# ரஷ்ய விமானப்படைத்தாக்குதலால் சிரியாவில் பத்து பேர் உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டின் வடமேற்கு பகுதியில் உள்ள இட்லிப் மாகாணத்தில் ரஷ்ய விமானப்படை நேற்று நடத்திய தாக்குதலில் பொதுமக்களில் 10 பேர் உயிரிழந்தனர்.

சிரிய நாட்டின் பல முக்கிய நகரங்களை முன்னர் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்திவந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் அரசுப்படைகள் நடத்திய ஆவேச தாக்குதலில் கொல்லப்பட்டனர். பலர் உயிர் பயத்தில் பாலைவனப் பகுதிகளை நோக்கி ஓட்டம் பிடித்தனர்.

அவர்களில் சிலர் யூப்ரெட்டஸ் நதிக்கரையோரம் அமைந்துள்ள புறநகர் பகுதிகளில் பதுங்கியுள்ளனர். அங்கிருந்தவாறு அவ்வப்போது பயங்கரவாத தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.



இந்தப் பயங்கரவாதிகளை வேட்டையாடும் பணியில் ஈடுபட்டுள்ள சிரிய இராணுவத்துக்கு உதவியாக ரஷ்ய நாட்டு விமானப்படைகளும் களத்தில் உள்ளன.

இந்நிலையில், அந்நாட்டின் வடமேற்கு பகுதியிலுள்ள இட்லிப் மாகாணத்தில் ஆதிக்கம் செலுத்திவரும் அல்கொய்தா ஆதரவு பெற்ற பயங்கரவாதிகளின் மறைவிடங்களை குறிவைத்து ரஷ்யாவின் போர் விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலில் பொது மக்களில் 10 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர் என சிரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (2)

# ...லாறி மோதி விபத்து

## • 25 பேர் படுகாயம்



...தன. பேருந்தில் இருந்த பயணிகள் இடிபாடுகளில் சிக்கி உடல் உறுப்புகள் சிதைந்த நிலையில் உயிருக்குப் போராடினர்.

விபத்து குறித்து தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 10 பேர் பலியாகினர். சுமார் 25 பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்தில் சிக்கிய வாகனங்கள் வீதியில் கவிழ்ந்ததால் தேசிய நெடுஞ்சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. (2)

# கிறிஸ்தவ ஆலயத்தில் தீ விபத்து; மூச்சுத்திணறி இருவர் மரணம்

(ஷில்லாங்)

மேகாலயாவில் கிறிஸ்தவ ஆலயத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

மேகாலயாவின் தலைநகர் ஷில்லாங்கில் உள்ள பழைமையான கிறிஸ்தவ ஆலயத்தில் எதிர்பாராதவிதமாக இந்த தீ விபத்து ஏற்பட்டது.

இந்த தீ விபத்தில், கிறிஸ்தவ ஆலயத்தை ஒட்டியுள்ள பல வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இதில் கிறிஸ்தவ ஆலயத்தின் அருகே உள்ள வீட்டில் வசித்து வந்த வயதான கணவன்-மனைவி புகைமூட்டத்தில் சிக்கி, மூச்சுத் திணறி உயிரிழந்தனர்.

இந்த தீ விபத்தில் கிறிஸ்தவ ஆலயம் முற்றாகச் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நடைபாதையில் சென்றவர் சுட்டுப் படுகொலை

(டொரண்டோ)

கனடாவில் நடைபாதையில் சென்று கொண்டிருந்த ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.40 மணியளவில் மேற்கு டொரண்டோவில் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

அங்கு திடீரென துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்ட நிலையில் கண்காணிப்பு பணியில் இருந்த பொலிஸார் சென்று அவதானித்துள்ளனர். அப்போது துப்பாக்கி குண்டுகள் பாய்ந்த நிலையில், படுகாயங்களுடன் கிரைக் கேம்பெல் (வயது-42) என்ற ஆண் வீதியில் வீழ்ந்து கிடந்தார். இதையடுத்து அவர் உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2)





# நெதர்லாந்து ராணி பாகிஸ்தான் பயணம்

(இஸ்லாமாபாத்)

நெதர்லாந்தின் ராணி மேக்சிமா நவம்பர் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளரின் சிறப்பு சட்டத்தரணியாக அவர் வருகை தரவுள்ளதாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையில், 'நவம்பர் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் ராணி மேக்சிமா, பாகிஸ்தான் ஜனாதிபதி ஆரிப் ஆல்வி, பிரதமர் இம்ரான்கான் ஆகியோரை சந்தித்து ஆலோசனை நடத்துவார். நாட்டின் உள்ளடக்கிய நிதி மேம்பாடு குறித்து ஆலோசனை நடத்த உள்ள அவர், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவன தலைவர்களையும் சந்தித்து பேசுவார்' என தெரிவிக்கப்பட்டது. (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு தமிழர்கள் தமக்கான சிறந்த வாய்ப்பினை இழந்துள்ளனர்

## கருணா கவலை



(ஏறாவூர்)

வடக்கு-கிழக்கு தமிழர்கள் தமக்கான சிறந்த வாய்ப்பினை இழந்துள்ளதாக முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "நான் வாக்களிக்கச் சென்ற பின்னர் தெரிவித்திருந்தேன், 52 வீதம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக கோத்தபாய தெரிவு செய்யப்படுவார் என்று. அதேபோன்று தற்போது நடந்துள்ளது. அதனை விடக் கூடுதலான வாக்குகளைப் பெற்று கோத்தா வெற்றி பெற்றார்.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் சிறந்த வாய்ப்பினை இழந்திருக்கின்றார்கள். கோத்தபாய ராஜபக்ஷ நிச்சயமாக வெற்றிபெறுவார் என்று தெரிந்திருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் தமிழ் மக்களை ஏமாற்றி மக்களை திசை திருப்பி வாக்குகளைச் சிதறடித்துள்ளனர்.

தமிழ் மக்கள் கோத்தபாயவுக்கு வாக்களித்திருந்தால் நாங்கள் உரிமையுடன் எங்களது விடயங்களைக் கேட்டு சாதிப்பதற்கான நிலையிருந்திருக்கும். இருப்பினும் கோத்தா பாரபட்சமற்ற வகையில் விடயங்களைச் செய்வார்.

இருந்தபோதிலும் தமிழ் மக்கள் புத்திசாதுரியமாகச் செயற்பட வேண்டிய காலமாகவுள்ளது. கோத்தபாய தோல்வியடைந்திருந்தால் கிழக்கு மாகாணம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.(இ-7)

# கோத்தாவுக்கு றிசாத் வாழ்த்து

(கொழும்பு)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வேண்டுகோளை ஏற்று சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்த சகோதரர்கள் அனைவருக்கும் கட்சி சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.



இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ அமோக வெற்றி பெற்று புதிய ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார். இந்தத் தேர்தலில் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸ இரண்டாவது இடத்தைப் பெற்றார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் றிசாத் பதியுதீன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அத்துடன், வாக்காளர்களாகிய உங்களுடனான தமது பயணம் எதிர்காலத்திலும் தொடருமென உறுதியளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார் (இ-7)

# ஐ.தே.கவை முழுமையாக மறுசீரமைக்க வேண்டும்

## பொன்சேகா வலியுறுத்து



(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியை முழுமையாக மறுசீரமைக்க வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கட்சித் தலைமைகளின் அணுகுமுறை மாற வேண்டுமெனவும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார்.

அதாவது, மக்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு அதனடிப்படையில் கட்சியை மறுசீரமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கக்கூடிய செயற்பாடுகளை முன்னெடுங்கள்



## கோத்தாவுக்கு சங்கக்கார ஆலோசனை


(கொழும்பு)

அரசியல் கட்சி, குடும்பம் என்பவற்றுக்கு அப்பால் இலங்கையர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கக் கூடிய புதிய வகையில் செயற்பாடுகளை முன்னெடுப்பதே சிறந்ததென புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவிற்கு முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவிற்கு, குமார் சங்கக்கார தனது டுவிட்டரில் வாழ்த்துத் தெரிவித்தார்.

அந்த வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், "அனைத்து இலங்கையர்களையும் உண்மையாக ஒன்றிணைக்கும் பார்வையும் வல்லமையும் பெற வாழ்த்துகிறேன்.

நாட்டிலுள்ள அனைத்து இலங்கையர்களின் பாதுகாப்பு, செழிப்பான வாழ்க்கையை உறுதிப்படுத்த வாழ்த்துகிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



Kumar Sangakkara
@KumarSanga2

Congratulations to @GotabayaR. Wishing him the strength of vision to rise above petty party & familial politics & loyalties and truly unite all peoples of Sri Lanka. Sri Lankans across our whole island, sharing in a common prosperity living together in safety security and trust.

♡ 1.120 08.23 - 16 Nov 2019

147 people are talking about this

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தமிழ்த் தாத்தா

1887 ஆம் வருடம் ஆவணி மாதம் ஒரு முக்கியமான நாள். கும்பகோணம் கல்லூரியில் ஒரு வாரம் விடுமுறை.

அந்த விடுமுறையை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும் என்று நினைத்தார் ஒருத்தர். திருநெல்வேலி பக்கம் போய் பழைய ஏட்டுச் சுவடிகள் தேடலாம் என்று நினைத்தார் அவர்.

நெல்லைப் பகுதியில் பரம்பரை வித்துவான் வீடுகளில் "பத்துப் பாட்டு" ஏடுகளைத் தேடலாம் என்று முடிவு செய்தார்.

அவர்கள் அப்பாவோ "சிராவணத்திற்கு இங்கே இருக்க வேண்டாமா? இந்த நேரத்தில் வெளியூருக்குப் போக வேண்டுமா?" என்றார்.

ஆனால் இவரோ அதைவிட பத்துப்பாட்டு தான் முக்கியம் என்று நினைத்தார். அப்பாவிடம் ஏதோ சமாதானம் சொல்லிவிட்டு புறப்பட்டான்.

ஒரு ஒற்றை மாட்டு வண்டியில் ஏறி புகையிரத நிலையத்திற்கு போகிறார். பாதி வழியில் வண்டி குடை சாய்கிறது! இவர் கீழே விழுகிறார். இவர் மேலே தகரப்பெட்டி விழுகிறது! இதற்காக பயணத்தை நிறுத்தவில்லை!

புகையிரதத்தில் ஏறினார். புகையிரதம் புறப்பட்டது. தஞ்சாவூர் தாண்டி போய்க்கொண்டிருக்க! அப்போது திடீரென்று பாதிவழியில் அதுவும் நின்றது! இவர் "என்ன விடயம்" என்று எட்டிப்பார்த்தார்.

ஒரு அதிகாரி வேகமாக வந்து, "கீழே இறங்கி வேறு பெட்டியில் ஏறிக்கொள்ளுங்கள்" என்றார். முன்னால் உள்ள பெட்டியில் தீப் பிடித்துக்கொண்டதாம். அதற்குத்தான் அப்படி சொல்லியிருக்கிறார்.

இவர் கீழே இறங்கி வேறு பெட்டியில் இருந்து கொண்டார். ஒரு வழியாக புகையிரதம் திருநெல்வேலிக்குப் போய் சேர்ந்தது! இப்படி விடாப்பிடியாக இருந்து தமிழ் இலக்கியங்களை நமக்குத் தேடிக் கொடுத்தவர் யார் என்று நினைக்கிறீர்கள்? வேறு யார்? நமது தமிழ் தாத்தா தான். உவே.சாமிநாத ஐயர்!

நாமாக இருந்தால் ஒற்றை மாட்டு வண்டி குடை சாய்ந்தபோதே "நேரம் சரியில்லை" என்று சொல்லி வீட்டுக்குத் திரும்பியிருப்போம். கும்பகோணம் கல்லூரியில் ஒருநாள் வருடம் 1900 மே மாதம் இரண்டாம் திகதி இளங்கலை மாணவர்களுக்கு இவர் தமிழ்ப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவர் எழுந்து இவரிடம் சொல்கிறார்,

"ஐயா! எங்கள் விடுதிக்கு ஒருவர் வந்திருக்கிறார். முன்பு வசதியாக வாழ்ந்தவர். இப்போது வறுமையில் இருக்கிறார். கடன் சுமை அதிகம். கடன்காரங்களுக்குப் பயந்துகொண்டு இப்போது தலைமறைவாக இருக்கிறார். அவர் ஒரு பெரிய துணிமூட்டை ஒன்று வைத்திருக்கிறார். அதில் பழைய தமிழ்ச்சுவடிகள் நிறைய இருக்கிறது. நூறு சுவடிகளுக்கு மேலே இருக்கும்.

அவ்வளவையும் அவர் அன்பளிப்பாக கொடுப்பதற்கு வந்திருக்கிறார். அவர் தனக்கு பணம் எதுவும் வேண்டாம். இதைப் பாதுகாத்தால் போதும் என்கிறார்?" அப்படி என்று அந்த மாணவர் சொன்னார்.

தமிழ்த் தாத்தாவுக்கு தாங்க முடியாத மகிழ்ச்சி! உடனே நேரில் போய் அதை வாங்கிக்கொள்ள வேண்டும் என்று நினைத்தார். ஆனால் அந்த மாணவர் தானே போய் அந்தச் சுவடி கட்டுகளை எடுத்துக்கொண்டு வந்து தன் ஆசிரியரிடம் கொடுத்தார்.

சுவடி தந்த அந்தப் பெரியவரை பார்க்காமல் இருந்தால் அது பெரிய பாவம் என்று சொல்லி உடனே விடுதிக்குப் போனார். உ.வே.சா! ஆனால் அதற்குள்ளே அந்தப் பெரியவர் தன்னுடைய பேரையோ ஊரையோ யாரிடமும் சொல்லாமல் போய்விட்டார்!

அவரைப் பார்க்க முடியவில்லை என்று தமிழ்த் தாத்தாவுக்கு ரொம்ப வருத்தம். அது யார் என்பது இதுவரைக்கும் யாருக்குமே தெரியாமல் போய்விட்டது! ஆனால் அந்தச் சுவடியை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்த மாணவர் பெயர் சாம்பசிவ செட்டியார் அப்படி என்று உ.வே.சா.சொல்லியிருக்கிறார்.

"தமிழ் விடுதூது" அந்த சுவடிக்கட்டில் தான் இருந்ததாம்! இந்தக் காலத்து எழுத்தாளர் ஒருவர் தன் மனைவியைக் கூப்பிட்டு இருக்க வைத்து இவ்வளவு விபரத்தையும் சொன்னார். அந்த அம்மாவும் பொறுமையாக கடைசி வரைக்கும் கேட்டுக்கொண்டிருந்தார்கள்!

"அபூர்வமான சுவடிகளை அழியாமல் காப்பாற்றி இலக்கியத்திற்கு பெரும் சேவை செய்தவர் அந்தப் பெரியவர். அதுமாதிரி நாமும் நம்மால் முடிந்து சேவையை செய்ய வேண்டும்!" என்றார் அந்த எழுத்தாளர் தன் மனைவியிடம்!

அதற்கு அந்த அம்மா "சில சுவடிகளை அழியாமல் காப்பாற்றினால் அது சேவை! சில சுவடிகளை அழித்துவிட்டால் அதுதான் சேவை! அப்படிப்பட்ட பெரிய சேவையை இலக்கிய உலகத்திற்கு நான் இன்றைக்கும் செய்துகொண்டிருக்கிறேன்!" என்றார். அப்படி என்ன செய்கிறாய்? என்று ஆச்சரியமாகக் கேட்டார் எழுத்தாளர்.

"நீங்கள் தினமும் எழுதி மலையாகக் குவித்து வைத்திருப்பதை எல்லாம் நான் அப்ப்போ எடுத்து அடுப்பு எரிக்க உபயோகப்படுத்துகிறேனே! இலக்கிய உலகத்திற்கு இதைவிட பெரிய சேவை நான் என்னத்தை செய்துவிட முடியும்!" என்றார் அந்த அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக ரீதியில் பிளவுபட்டுள்ள இரு தேசங்களையும் ஒன்றாக்குக

## புதிய ஜனாதிபதியிடம் சிவில் சமூக அமைப்பு கோரிக்கை



(கொழும்பு)

**ஜனநாயக ரீதியில் பிளவுபட்டு நிற்கும் இரண்டு தேசங்களையும் ஒன்றாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ஷவிடம் வடக்கு-கிழக்கு சிவில் சமூக அமைப்பு கோரிக்கை விடுத்தது. கடந்த அரசாங்கம் ஆரம்பித்த அரசியல் யாப்பு சீர்திருத்தப் பணிகளை முன்னெடுத்து அதனூடாக சிறுபான்மை மக்களுக்கான அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டும் எனவும் சிவில் அமைப்பினர் கேட்டுக்கொண்டனர்.**

இது தொடர்பாக அந்த அமைப்பு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விடுத்த ஊடக அறிக்கையில், "இலங்கையின் ஏழாவது ஜனாதிபதித்தேர்தலில்வடக்கு-கிழக்கு தமிழர்களாகிய நாம் மீண்டும் ஒரு வரலாற்றுப் பதிவை ஏற்படுத்தியுள்ளோம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு தமிழ் மக்கள் இலங்கையின் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தனக்கான உரிமைகளுக்காக போராடி வருகின்றனர்.

இலங்கையின் சுயநிர்ணய உரிமை கோரிக்கைக்கு உரித்துடைய தனியான இனக் குழுமம் என்ற அடிப்படையில் இலங்கையில் தனியான தாயகம், மொழி, பண்பாடு, கலாசார வரலாற்றைக் கொண்ட இனம் என்ற அடிப்படையில் நடந்து முடிந்த ஏழாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஆகிய நாம் எமது தனித்துவத்தை மேலும் நிரூபித்துள்ளோம். எழுபது ஆண்டுகளைக் கடந்தும் தமிழர் தேசம் மீண்டும் தனது தனித்துவத்துடன் தனியாக நிமிர்ந்து நிற்கிறது.

அகிம்சைப் போராட்டக் காலத்திலும், ஆயுதப் போராட்ட காலத்திலும் தமிழ் மக்கள் எந்த நிலைப்பாட்டை எடுத்தார்களோ அதே நிலைப்பாட்டை யுத்தம் நிறைவடைந்து பத்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் கையில் எடுத்து பயணிக்கின்றனர்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு-கிழக்கு தமிழர்கள் தங்களது உரிமைக்காக மீண்டும் தன்னெழுச்சியாக ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

இதனூடாக தமிழர் தேசம் சிங்கள தேசத்திற்கு மீண்டும் மீண்டும் தங்களது சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை பறைசாற்றியுள்ளது.

தமிழர்கள் இலங்கையில் தங்களது வாக்குகளைக் கொண்டு ஜனநாயக ரீதியில் ஒரு வரைபடத்தை மீண்டும் உருவாக்கிக் காட்டியுள்ளனர்.

இதனூடாக தமிழ் மக்கள் இந்த நாட்டில் கோரி நிற்பது அபிவிருத்தியையோ அல்லது சலுகைகளையோ அல்ல. சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய அதிகாரப்பகிர்வையே வேண்டி நிற்கின்றனர்.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று வர்ணிக்கப்படும் இலங்கை நாடு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காது எந்த வித நிரந்தர அபிவிருத்தியையோ நல்லிணக்கத்தையோ கட்டியெழுப்ப முடியாது.


இந்த நாட்டில் தமிழ் மக்களின் உயிர்ப்பலிகளும் தியாகங்களும் மதிக்கப்பட்டு அவர்களது தாயக பூமியில் அவர்கள் முழு அதிகாரம் கொண்ட மக்களாக ஒருமித்த நாட்டுக்குள் வாழ்வதற்கு பதவி ஏற்கும் அரசாங்கம் வழிவகைகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

வடக்கு-கிழக்கு தமிழர் தேசத்துக்கு தனது நேசக்கரத்தை நீட்டி இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண முன்வர வேண்டும்.

எனவே இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் முடிவை முடிந்த முடிவாக எடுத்து இலங்கை அரசும் சர்வதேச நாடுகளும் சிறுபான்மை இன மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்து அல்லது கடந்த அரசு ஆரம்பித்த அரசியல் யாப்பு சீர்திருத்தப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

அதனூடாக சிறுபான்மை மக்களுக்கான அதிகாரப் பகிர்வை வழங்கி ஜனநாயக ரீதியில் பிளவுபட்டு நிற்கும் இரண்டு தேசங்களையும் ஒன்றாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கையில் புதிதாக தெரிவான ஜனாதிபதியிடம் இந்தக் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்" என்று அந்த அறிக்கையில் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (இ-7)

## வெண்தாமரையை அடிப்படையாகக்கொண்டு கொடியை அறிமுகப்படுத்தினார் கோத்தபாய



(கொழும்பு)

ஜனாதிபதிகோத்தபாயராஜக்ஷ, தனது செயலகக் கொடியை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். தூய்மையான வெண் தாமரையை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கொடி, ஊழல் அற்ற ஆட்சியை சுட்டிக் காட்டுவதாக விளக்கமளிக்கப்பட்டது.

இலங்கையின் ஒவ்வொரு ஜனாதிபதியும் தனது செயலகத்திற்கு கொடியை உருவாக்கு வது வழக்கம். அதனடிப்படை யிலேயே ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவும் இவ்வாறு கொடியை அறிமுகப்படுத்தினார். (இ-7)

## மாவட்ட செயலகத்திற்குள் நுழைந்து முன்னாள் ஜனாதிபதி, பிரதமரின் ஒளிப்படங்களை அகற்றியவர் கைது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின், அரசாங்க அதிபரின் அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து ஒளிப்படங்களை அகற்றிய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் அரசாங்க அதிபரின் அலுவலகத்திற்குள் நேற்றுத் திங்கட்கிழமை பகல் நுழைந்த நபர், அங்கிருந்த முன்னாள் ஜனாதிபதி மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர், பிரதமர் ஆகியோரின் ஒளிப்படங்களை அகற்றினார்.

இதன்போது அங்கு பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸார் குறித்த நபரை கைதுசெய்து மட்டக்களப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## மகிந்தவின் சேவை நாட்டுக்குத் தேவை

### கோத்தபாய வாழ்த்து



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சேவையை மீண்டும் நாடு கோருவதற்கான நேரம் இதுவென புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்றுத் திங்கட்கிழமை தனது பிறந்தநாளை கொண்டாடினார்.

இந்நிலையில் அவருக்கு அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள் எனப் பலரும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

கோத்தபாயவும் மகிந்தவுக்கு வாழ்த்துச்செய்தியொன்றை அனுப்பினார். அதில் பிறந்தநாளை முன்னிட்டு வாழ்த்துவதாகவும் நாடுமீண்டும்தங்களின்சேவையை கோரியுள்ளதாகவும் குறிப்பிட்டார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பதற்கான ஒத்துழைப்பை புதிய ஜனாதிபதிக்கு வழங்குவேன்

## சஜித் திட்டவட்டம்



(கொழும்பு)

இந்நாட்டின் பிரஜை என்ற வகையில், ஒருமித்த நாட்டிற்குள் அனைத்து இன, மத மக்களையும் ஒன்றிணைத்து சுபீட்சமானதொரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான ஒத்துழைப்பை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவிற்கு நான் தொடர்ந்தும் வழங்குவேன் என்று புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஏழாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான எட்டாவது ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கொழும்பிலுள்ள சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தேர்தல்கள் ஆணையாளரால் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர், உரையாற்றிய போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தர்.


அவர் அங்கு மேலும் கூறியதாவது.

நாட்டின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் எனக்காக வாக்களித்த அனைத்து மக்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் என்மீது நம்பிக்கை வைத்தமை குறித்து மகிழ்வடைகிறேன். எனது 26 வருட அரசியல் பயணத்தை வலுப்படுத்துவதற்கு உங்களுடைய ஆதரவு பெரும் உறுதுணையாக அமைந்திருந்தது. அதேபோன்று எனது தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் ஓய்வின்றிப் பணியாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நானும், எனது குடும்பத்தினரும் உங்களுடைய அர்ப்பணிப்புக்களை ஒருபோதும் மறக்கமாட்டோம்.

எமது நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து மிகவும் அமைதியான ஜனாதிபதித் தேர்தலை இம்முறை கண்டிருக்கிறோம். கடந்த ஐந்து வருடகாலமாக வலுப்படுத்தப்பட்ட ஜனநாயகம் மற்றும் சுயாதீன கட்டமைப்புக்களின் மறுசீரமைப்பு என்பவற்றின் விளைவே இதுவாகும். அவற்றின் ஊடாகவே சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவை ஸ்திரப்படுத்த முடியுமாக இருந்ததுடன், சட்டத்தின் ஆட்சியும் நிலைநாட்டப்பட்டது.

மேலும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கான தலைமைத்துவத்தை வழங்கிய தேர்தல்கள் ஆணையாளருக்கும் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கும் இதில் பங்களிப்புச்செய்த அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒருமித்த நாட்டிற்குள் அனைத்து இன, மத மக்களையும் ஒன்றிணைத்து சுபீட்சமானதொரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான ஒத்துழைப்பை ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள கோத்தபாய ராஜபக்ஷவிற்கு இந்நாட்டின் ஒரு பிரஜை என்ற வகையில் நான் வழங்குவேன் என்றும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோத்தாவின் உறுதியை பாராட்டிய சபாநாயகர்


Karu Jayasuriya
@KaruOnline

My heartfelt congratulations to President-elect Hon. Gotabhaya Rajapaksa and appreciate that you are 'committed to serve all the people of Sri Lanka'. Sincerely thankful also to political leaders, election commission and SL Police who ensured a fair election.

199 10:31 AM - Nov 18, 2019

16 people are talking about this

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள கோத்தபாய ராஜபக்ஷவிற்கு தனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கோத்தபாய ராஜபக்ஷ இலங்கை மக்கள் அனைவருக்கும் சேவை செய்ய உறுதி பூண்டுள்ளதைப் பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# புதிய ஜனாதிபதி கோத்தபாயவுக்கு சம்பந்தன் வாழ்த்து



(கொழும்பு)

7 ஆவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வாழ்த்து தெரிவித்தார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி வாழ்தது தெரிவித்தார். (இ-7)

# முதல் சுற்றில் தற்காலிக பின்னடைவு ஏற்பட்டாலும் இரண்டாம் சுற்றில் மீண்டெழ வாய்ப்பு உள்ளது

## வேலுகுமார் நம்பிக்கை



(கண்டி)

தேர்தலில் நாம் ஆதரித்த அணி, பின்னடைவைச் சந்தித்திருந்தாலும் எமக்கான மக்கள் பலத்தில் மற்றும் ஆதரவில் எவ்வித வீழ்ச்சியும் ஏற்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாம் எடுத்த முடிவு சரியானது என்பதையே தமிழ் மக்கள் வழங்கியுள்ள பேராதரவு உறுதிப்படுத்துகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் என்ற முதல் சுற்றில் தற்காலிக பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும் நாடாளுமன்றத் தேர்தல் என்ற இரண்டாம் சுற்றில் மீண்டெழுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

அந்த வாய்ப்பை உரிய வகையில் பயன்படுத்திக்கொள்வது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் பங்காளிகளும் சிந்தித்துச் சிறப்பான அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் பேசும் மக்கள் பேராதரவை வழங்கியிருந்தனர்.

வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள 5 தேர்தல் மாவட்டங்களிலும் சஜித்தே வெற்றிபெற்றிருந்தார். நுவரெலியா மாவட்டத்திலும் முன்னிலை வகித்தார். அதே போல் கண்டி மாவட்டத்திலும் 44.46 சதவீத வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்.

கண்டி மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் இம்முறை மிகவும் ஆர்வத்துடன் வாக்களித்தனர். மொத்த வாக்களிப்பு வீதமானது 84.89 ஆகப் பதிவானது. இதன் காரணமாகவே நாவலப்பிட்டிய, கம்பளை, ஹேவாஹெட்ட, கண்டி, பாததும்பர ஆகிய தேர்தல் தொகுதிகளை எம்மால் கைப்பற்றக்கூடியதாக இருந்தது.

ஆகவே, என் மீது நம்பிக்கை வைத்து அன்னத்துக்கு வாக்களித்த மக்களுக்கு இத்தருணத்தில் நன்றிகூற கடமைப்பட்டுள்ளதுடன், மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் அரசியல் பயணத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டிய கடப்பாடும் எனக்கிருக்கின்றது. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது கண்டி மாவட்டத்தில் ஏணிச் சின்னத்தில் தனித்துப்போட்டியிட்டு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை வென்றெடுத்து எமது பலத்தை நிரூபித்தோம்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் அதனைச் செய்துகாட்டியுள்ளோம். எனவே, நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றிப் பயணம் தொடரும்.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணிக்கு ஏற்பட்ட இந்தத் தோல்வியானது தற்காலிக பின்னடைவாகும். எங்கு தவறிழைக்கப்பட்டுள்ளது என்பதை முதலில் ஆராய வேண்டும்.

பலவீனங்களைக் கண்டறிந்து அவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இவ்வாறு உரிய வகையில் தயாராகி நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டால் நிச்சயம் வெற்றிபெறலாம். இதனைவிடுத்து கட்சி அரசியலையும் நபர்களையும் முன்னிலைப் படுத்தி செயற்பட்டால் மீண்டெழ முடியாத நிலை ஏற்படும்.

அதேவேளை, இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், இன, மத, குல, கட்சி பேதங்களுக்கு அப்பால் இலங்கையில் வாழும் அனைவரையும்அரவணைத்துக் கொண்டு பயணிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆணையை மதிக்கின்றோம்

## அநுரகுமார தெரிவிப்பு



(கொழும்பு)

மக்கள் ஆணையை மதிக்கின்றோம் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை தேர்தலில் எமது கட்சி உள்ளிட்ட தரப்புக்களால் களமிறக்கப்பட்ட சில வேட்பாளர்களுக்கு எதிர்பார்க்கப்பட்டளவு மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை.

பிரதான இரண்டு தரப்புக்களால் தேர்தல் பிரசாரம் செய்யப்பட்ட நிலையில் எமக்கு அவற்றுடன் போட்டியிடுவதில் சிக்கல் காணப்படுகின்றது.

அதனைப் புரிந்து கொண்டே தேர்தலில் போட்டியிட்டோம். எனினும், ஒரு சில விடயங்களை நாம் எதிர்பார்த்தோம். எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் எமக்குக் கிடைக்கப்பெறவில்லை. எம்முடைய கணிப்பு தேர்தல் முடிவுகளில் வெளிப்படவில்லை.

இது மக்களின் விருப்புக்களின் அடிப்படையில் இடம்பெற்ற அதிகார மாற்றமாகும். எனவே அனைத்து அரசியல் தரப்புக்களும் இந்த விடயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புதிய ஜனாதிபதி முன்னெடுக்கும் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிப்போம் -மகேஷ் உறுதி



(கொழும்பு)

புதிய ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை முன்னெடுக்கும் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிப்போம் என தேசிய மக்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் நான் கட்சி சார்பற்றவராக போட்டியிட்டபோதும் எதிர்வரும் தேர்தல்களில் தேசிய மக்கள் கட்சியுடன் இணைந்து எமது பயணத்தை தொடரவுள்ளேன். எனது இந்தப் பயணத்துக்கு அதிகமான இளைஞர்களை இணைத்துக் கொண்டு நாட்டின் எதிர்காலத்தை அவர்களின் கைகளுக்கு வழங்குவதே எமது நோக்கமாகும்.

இன, மத பேதமின்றி நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்ல இணைந்து செயற்படுவதற்கு அனைவருக்கும் நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்.

மேலும் அடுத்துவரும் பொதுத் தேர்தலில் நாம் போட்டியிடுகின்றோம். எமது அணியில் சிறந்த புத்திஜீவிகள் இருக்கின்றனர். ஜனாதிபதித் தேர்தலுடன் பொதுத்தேர்தலை ஒப்பிட முடியாது. அதனால் முறையான அரசியல் கலாசாரம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு மக்கள் எமக்கு ஆதரவளிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பிலுள்ள தேசிய மக்கள் கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். (இ-7)

## 300 அடி பள்ளத்தில் பாய்ந்து

# கார் விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலி! மூவர் படுகாயம்



(பதுளை)

பதுளையில் நேற்று இடம்பெற்ற புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் பதவியேற்பு வெற்றி விழாவிலும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் விழாவிலும் பங்குபற்றி விட்டு வீடு திரும்பியவர்கள் பயணித்த கார் ஒன்று பாதையை விட்டு விலகி 300 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்தார்.


குறித்த விபத்தில் பதுளை இ.போ.ச.பேருந்து சாரதியான நிமல் திஸாநாயக்க (வயது-48) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்துக்குள்ளான காரில் பயணித்த ஏனைய மூவர் கடும் காயங்களுக்குள்ளாகி பதுளை அரசினர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

## பிரபாகரனின் உறுதி-நடத்தையை பாராட்டிய

# மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன பாதுகாப்புச் செயலராக நியமனம்



(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன நியமிக்கப்பட்டுள்ளார். இன்று மாலை பதவியேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சோஷலிச குடியரசின் 7 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ள நிலையில் முதலாவதாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இறுதிப் போரில், மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன 53 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக பணியாற்றியிருந்தார்.

இவர் எழுதிய, நந்திக்கடலுக்கான பாதை நூல் சிங்கள மக்கள் மத்தியில் பிரபலமானது.

அதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உறுதி, நடத்தையை வெகுவாகப் பாராட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கோத்தபாயவுக்கு ஆனந்தசங்கரி வாழ்த்து



(யாழ்ப்பாணம்)

இலங்கை ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதியாக தாங்கள் தெரிவுசெய்யப்பட்டமைக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன் என கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

ஒருசிலர், தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தையும் ஒரு கொடியின் கீழ் இணைத்துக்கொள்ள எடுத்துக்கொண்ட நடவடிக்கை வகுப்புவாதப் பாதையில் பிரசாரம் நகர்வதை உணர்ந்தநான் உங்களுடைய தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொள்ளாமைக்கு மன்னிப்புக் கோரவேண்டிய அவசியமில்லை எனக் கருதுகிறேன்.

நடந்தேறிய தேர்தல் நான் நினைத்தது சரியென நிரூபித்துக் காட்டியுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் பொதுத் தேர்தல்கள் மட்டுமன்றி சகல விடயங்களிலும் இனவாதம் தலைதூக்கிய போதெல்லாம் நான் வெறுப்படைந்திருந்தது நீங்கள் அறியாததல்ல.

ஒரு குழுவினர் ஒன்றிணைந்து தாங்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் தமது கோரிக்கைகள் 13 இனை நிறைவேற்ற வேண்டுமெனக் கூறியிருந்தனர். அக்குழுவில் பலர் இருந்தபோதும் ஒரு அமைப்பைச் சேர்ந்தவர் கூட தம்முடன் இணையும் படி என்னிடம் கோரிக்கை விடவில்லை.

என்னுடன் தொடர்பு கொண்டு இணையுமாறு கோரிக்கை விடப்பட்டிருந்தால் நிச்சயமாக நான் அவர்களுடன் இணைந்திருக்க மாட்டேன். அவர்கள் முன்வைத்த 13 கோரிக்கைகளில் முதலாவதே சர்ச்சைக்குரிய இனப்பிரச்சினை பற்றியதாகும். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எனது நிலைப்பாடு என்ன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்! இத்தீர்வை தாங்கள் ஜனாதிபதி பதவி வகிக்கின்ற காலத்திலேயே நிறைவேற்றுவீர்கள் எனத் திடமாக நம்புகிறேன்.

இலங்கையின் ஜனாதிபதி பதவியில் தாங்கள் சிறப்புடன் செயற்பட்டு, நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 1.540 கிலோகிராம் தங்கத்துடன் இந்தியப் பிரஜைகள் மூவர் கைது

(கொழும்பு)

1.540 கிலோ கிராம் தங்கத்துடன் மூன்று இந்தியப் பிரஜைகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக்காலை கைது செய்யப்பட்டனர்.

சென்னை செல்ல முயற்சித்தபோதே அவர்கள் மூவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 29, 32 மற்றும் 34 வயதுடையவர்கள் எனவும் மேலதிக விசாரணைகளுக்காக அவர்கள் சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதையல் தோண்டிய நால்வர் கைது

(தெதிகம)

தெதிகம - கெடவலதெனிய பிரதேசத்தில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.15 மணியளவில் 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி சேவைக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 20,49 மற்றும் 58 வயதுடைய புலத்கொஹூபிடிய, கொடியாகுமுர, பெலவத்த மற்றும் பாதுக்க ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. இது தொடர்பில், தெதிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகளிர் மகத்துவமும் இன்றைய மகளிரும்



நவம்பர் மாதம் 19 ஆம் திகதியை மகளிர் தினமாக பகவான் சத்திய சாயிபாபா பிரகடனப்படுத்தியுள்ளார். இதையொட்டி கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

பெண்களை கடவுளின் சக்தி என்பார்கள். அன்னை பராசக்தியின் வடிவமான அவள் போற்றுதற்குரியவளாகின்றாள். மனிதர்களுக்கு ஒரு தோழி; வாழ்க்கையின் அருஞ்செல்வம்; இயற்கையின் விசித்திரம் அதன் அற்புதங்களுக்கெல்லாம் அற்புதம் வீட்டுக்கு அரசி லக்ஷ்மி இனிமையான துணைவி என்ற பெருமை எல்லாம் பெற்றுத் துலங்குபவள் பெண். இயற்கையாகவே பொறுமை, சகிப்புத் தன்மை, பக்தி பிரேமை ஆகிய நற்குணங்கள் நிரம்பியவளாகவே அவள் காணப்படுகிறாள். தாயாக, பிள்ளையாக மனைவியாக எனப் பல நிலைகளில் இருந்து ஒரு வீட்டையும் சமுதாயத்தையும் நாட்டையும் தாங்கிப் பிடிக்கும் தூணாகச் செயற்படுகிறாள்.

பெண் என்பவளுக்கு நாணம் ஓர் அணிகலன் போன்றது. ஒரு பெண் அழகும் நாகரிகமும் உள்ள போதும், நாணம் இல்லாதவளாக இருக்கும் போது அது அவளது பெண்மையை வெறுமையாகத் தோற்றுவிக்கும். பெண்மையை ஒளி இழக்கச்செய்துவிடும். எளிமை, பணிவு, சுறுசுறுப்பு இனிய சுபாவம் உயர் தத்துவங்களின் மேல் பற்றுதல், அடக்கம் ஆகியவற்றின் கூட்டுக்கலையே நாணம் எனப்படுகிறது. இத்தகைய நாணமுடைய பெண் இயற்கையாகவே தனது எல்லையை மீறி போக மாட்டாள். இது அவளைத் தெய்வ நிலைக்கு உயர்த்துகிறது.

மலர்களிலுள்ள தேன் வண்டுகளையோ, தேனீக்களை வருந்தி அழைப்பதில்லை. அவற்றைத் தேடிச் செல்வதுமில்லை. அந்தத் தேனைச் சுவைக்க அவைகளே அந்த மலர்களைத் தேடி வருகின்றன. ஒரு நாணமுள்ள பெண்ணுக்கும் அவளைத்தேடி வருகின்ற கௌரவத்திற்குமான தொடர்பும் இதைப் போன்றதே. எங்கள் அடுத்த தலைமுறையினர் சிறப்புற ஓங்க வேண்டுமாயின் அதற்கு ஆதாரமாய் இருப்பவர்களும் பெண்ணே. ஆதிகாலம் தொட்டே பெண்கள் தம் குழந்தைகளுக்கு சத்தியம், தர்மம், அன்பு இவற்றைப் பற்றி எல்லாம் போதித்து வந்துள்ளனர். இதில் ஒரு தாயின் பங்கு மிகவும் புனிதமானது. இதனால் ஒரு குழந்தைக்கு முதல் குரு தாயாகிறாள். எங்கள் கலாசாரம் தாய்மைக்கு முன்னுரிமை கொடுத்து மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நிலையில் இவர்களது பெருமையையும் முக்கியத்துவத்தையும் போதித்து வருகின்றது. மனித வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படும் உயர்ந்த உன்னத மேம்பாடுகளைக் கொண்ட உத்தமர்களான மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர், சரித்திர வீர சிவாஜி, அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் போன்ற பல மகான்களும் அவர்களது அன்னையர்களினாலேயே வளப்படுத்தப்பட்டார்.

இன்று இந்த வாழ்க்கை முறை ஒரு புறமிருக்க, நாகரிக வளர்ச்சி காரணமாக வசதி வாய்ப்புக்கள் பெருகி பெண்கள் மத்தியில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. புனிதமான, மேன்மையான வாழ்வு வாழும் பெண் எனப் போற்றப்பட்டவள், இன்று தன்னிச்சையான போக்கினால் உலக சுகங்களுக்கு அடிமையாகித் தன்னைத் தானே துன்புறுத்திக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளாள்.

பெண்ணானவள் இன்று நாகரிக மோகத்தில் திளைத்து செயற்படும் போது பின்னடைவையே சந்திக்க நேர்கின்றது. மாறாக அவள் தன்னுடையதும் தன் சந்ததியினர்களினதும் எதிர்கால வாழ்வு குறித்து சிந்தித்து செயற்பட வேண்டும். நாகரிகத்தோடு போட்டிபோட்டுச் செல்லாது பெண் சற்றே பின்னிற்கும் போது பெண்ணானவள் சமூகத்தில் சற்றே உயர் அந்தஸ்தினைப் பெற்றுக் கொள்கின்றாள்.

உலகியற் கல்வியை நாம் எவ்வளவு தான் கற்றுக் கொண்டாலும், எங்கள் தூய வாழ்வுக்கு ஆதாரமாக உறுதுணையாகவும் இருப்பது தெய்வீக அன்பும் ஒழுக்க விழுமியங்களுமாகும். எவ்வளவு தான் பட்டங்களைப் பெற்றாலும் நல்ல பண்புகள், பழக்க வழக்கங்கள், நன்னடத்தைகள், அன்பு செய்தல் போன்றனவற்றை நாம் தெரிந்து கொள்ளாவிட்டால் எமது கல்வியின் உச்சப்பயன் பூச்சியமாகவே அமைந்துவிடும்.

''சாதம் படைக்கவும் செய்திடுவோம்–தெய்வச் சாதி படைக்கவும் செய்திடுவோம்''

எனும் பாடல் வரிகளும் எமக்குப் பற்பல பாடங்களைக் கற்றுத் தருகிறது. பெண்களுக்கு பொதுவாக கிடைக்கும் "நல்ல மனைவி" எனும் அந்தஸ்தைக் காட்டிலும் "நல்ல தாய்" என்ற ஸ்தானமே உயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் கொள்ளப்படுகின்றது என பகவான் பாபா கூறுகின்றார். எனவே பெண்கள் நல்ல மனைவியாக இருப்பதை விட நல்ல தாயாக இருப்பது உலக நலன்சார்ந்த ஒரு விடயமாகிறது.

இவ் வழியில் "பெண்கள் நாட்டின் கண்கள்" என்ற இருப்பைத் தக்க வைக்க வேண்டுமெனில் தான் சார்ந்து நிற்கும் இடங்களிலெல்லாம் அறநெறி, அன்பு நெறி, ஒழுக்க நெறி என் பவற்றை மேம்படுத்தி தன் சந்ததியினரை வளர்த்தெடுக்க முயற்சிக்க வேண்டும். உடலாலும், மனதாலும் வலிமை பெற்றிருக்க வேண்டும். நல்ல தாய்மாரே நல்ல தேச மக்களை உருவாக்குகின்றார்கள். தாய்மார்கள் தியாகம், யோகம், பக்தி முதலானவற்றின் இருப்பிடமாகத் திகழ வேண்டும்.

ஒரு மரத்துக்கு ஆதாரமாக இருப்பது அதன் வேர் தான். மரத்துக்கு வேண்டிய நீரையும், கனியுப்புக்களையும் உறிஞ்சிக் கொடுத்து மரத்துக்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கின்றது மரத்தையும் விழாமல் தாங்கிப் பிடிக்கின்றது. அந்த வேருக்குரிய பெறுமதியை உடையவளாக எங்கள் பெண்ணினம் வாழ வேண்டும். ஏற்றம் பெற வேண்டும். இவ்வாறு பெண் தன்னை உன்னத நிலைக்கு மேம்படுத்திக் கொள்வாளேயானால் மானிடம் தழைத்தோங்கி அமைதிக்கும் ஓர் வழி பிறக்கச் செய்திடலாமே. ஜெய் சாய்ராம்.

திருமதி.க.உமாசங்கர்
யாழ்.மத்தி.
சத்ய சேவா நிலையம்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1892

### காருணி

வால்கை என்பது,அடுத்தவன் என்ன தப்பு பண்ணுறான்னுபார்ப்பதிலேயே போயிடும்...



இப்ப கூட பாருங்க வாழ்க்கைக்கு ஸ்பெல்லிங் தப்புனு சொல்ல வருவிங்க...

### மலர்




### அஜந்தா




### தாருக்ஷன்

இன்பத்திலும் ,துன்பத்திலும் நமது அருகில் நின்று தோள் கொடுக்க ஓர் தோழமை.



எந்த எதிர்பார்ப்பும் இல்லாத உண்மையான தோழமை இருந்தால் போதும்.

### விதுர்ஷா

வாழ்க்கையில விழுந்துஎழுந்திரிக்கிறதவிட...



காலையில ஆறு மணிக்கு தூக்கத்தில இருந்து எழுந்திருக்கிறது தான் ரொம்ப கஷ்டமா இருக்கு...

### அன்பழகன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்து மலையகத்தில் கொண்டாட்டம்

(ஹற்றன்)

ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வாழ்த்து தெரிவித்து நேற்று மலையகத்தில் கொண்டாட்டங்கள் இடம் பெற்றன.

இலங்கை சோசலிச குடியரசின் 7 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ நேற்று திங்கட்கிழமை பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்நிலையில் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து மலையகத்தில் கொண்டாட்டங்கள இடம்பெற்றன. இதன் ஒரு கட்டமாக புஸ்ஸல்லாவ நகரத்திலும் நேற்றுக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ)











# கோத்தபாயவுக்கு வாழ்த்து

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபையின் வரவு-செலவு கூட்டத்தில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தவிசாளர் தங்கவேலாயுதம் ஐங்கரன் தலைமையில் நேற்று சபை உறுப்பினர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். (இ-60)

# முஸ்லிம்களின் தோல்விக்கு முஸ்லிம் தலைமைகளே காரணம்

## ஆய்வாளர் இப்ராகிம் தெரிவிப்பு

(முறிகண்டி)



முஸ்லிம் சமூகத்தின் இந்த தோல்விக்கான முழுக்காரணம் முஸ்லிம் அரசியல் தலைமைகளின் சுயநலம் மட்டும் தான் என அரசியல் ஆய்வாளர் எம்.எச்.எம். இப்ராகிம் தெரிவித்துள்ளார்.

இலங்கை சோசலிச குடியரசின் 7 ஆவது ஜனாதிபதியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் வெற்றி குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலானது இலங்கை மக்களுக்கு பொதுவான ஒரு விடயத்தை தெளிவுபடுத்தியுள்ளது. நாங்கள் தொடர்ச்சியாகக் கூறி வந்தோம் அடுத்த ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவு செய்யப்படுவார் என. ஆனால் எங்களது கருத்துக்களை முஸ்லிம் தலைமைகள் அலட்சியம் செய்ததுடன் இவ்வாறான தலைவர்களே முஸ்லிம் சமூகத்தை காட்டிக்கொடுப்பவர்களாக இருந்தனர்.

எமது முஸ்லிம் சமூகமானது ஒரு கட்சியை மட்டும் நம்பாமல் பரந்து செயற்பட்டிருந்தால் இன்று இந்த வெற்றியில் நாமும் பங்காளர்களாக இருந்திருப்போம். முஸ்லிம் சமூகத்தின் இந்த தோல்விக்கான முழுக்காரணம் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைமைகளின் சுயநலம் மட்டும் தான்.

இவ்வாறு தான் 2010 இல் சரத் பொன்சேகாவை ஜனாதிபதி வேட்பாளராகக் கொண்டுவந்த சாணக்கிய தலைமைக்கு மூக்குடைக்கப்பட்டது. அதேபோல இன்றும் சஜித் பிரேமதாஸவை கொண்டு வந்து தற்போது மூக்குடைக்கப் பட்டு விட்டார். ஆகவே தான் முஸ்லிம் மக்களாகிய நாங்கள் இனியும் இந்த முஸ்லிம் தலைமைகளுக்குப் பின்னால் சென்று ஏமாற்றமடையக்கூடாது. முஸ்லிம் தலைமைகளை நம்பவும் கூடாது.

மேலும் இன்று இந்த முஸ்லிம் தலைமைகள் ஆதவன் பாட்டைக்காட்டி மக்களை ஏமாற்றுகின்றனர். ஆகவேதான் முஸ்லிம் மக்கள் இன்னும் இன்னும் ஆதவன் பாட்டை நம்பி வாக்களிக்காதீர்கள் என்றும் எதிர்வருகின்ற தேர்தல்களில் மக்களாகிய நீங்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும். எதிர்வரும் காலங்களில் இவ்வாறான ஒற்றுமையினை காரணமாக வைத்து செயற்பட சகல அரசியல் கட்சிகளும் முன்வர வேண்டும் என மேலும் தெரிவித்தார். (9-100)

# வீதி விபத்தால் ஏற்பட்ட கைகலப்பில் இளைஞன் பலி!

## தந்தையும் மகனும் கைது

(கடுகம்பல)

கிரியுல்ல - கடுகம்பல பிரதேசத்தில் வீதியில் சென்று கொண்டிருந்த லொறியொன்றின் பின்னால் பயணித்த மோட்டார் சைக்கிள் அந்த லொறியை முந்திச் செல்ல முற்பட்டது. இதன் போது வீதியோரத்தில் நின்று கொண்டிருந்த பிறிதொரு லொறியின் கதவு திறக்கப்பட்ட போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் விபத்துக்குள்ளாகினர்.

இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவருக்கும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறிச் சாரதிக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. மோதலின் போது லொறிச்சாரதியுடன் பிறிதொரு நபரும் இணைந்து மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை கடுமையாகத் தாக்கினர்.

தாக்குதலில் படுகாயமடைந்தவர்கள் தம்பதெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. உயிரிழந்தவர் 19 வயதுடைய கடுகம்பல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பில் தந்தையும் மகனும் கைது செய்யப்பட்டனர்.

குறித்த தந்தை பன்னல பொலிஸ் நிலையத்தில் பணிபுரிபவர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்தது. (இ-7)

# வெற்றுக்காணியிலிருந்து கைக்குண்டு மீட்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு இருதயபுரம் பிரதேசத்தில் வெற்றுக்காணியிலிருந்து கைக்குண்டு ஒன்றை நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு மீட்டதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இருதயபுரம் 10 ஆம் குறுக்கு வீதியிலுள்ள குறித்த வெற்றுக் காணியின் அருகில் சிறுவர்கள் நேற்று முன்தினம் பகல் விளையாடிக் கொண்டிருந்த போது குறித்த காணிக்குள் பந்து வீழ்ந்ததையடுத்து அங்கு சென்ற சிறுவர்கள் பந்தைத் தேடும் போது பந்து வடிவிலான குண்டு ஒன்றை கண்டு அதனை எடுத்து வீட்டிற்குச் சென்று பெற்றோரிடம் பந்து எனக் காட்டிய போது அதனை கண்ட பெற்றோர் குறித்த வெற்றுக் காணியில் மீண்டும் வீசியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்தது.

இதனையடுத்து குறித்த குண்டு தொடர்பாக இரவு 7 மணியளவில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் கைவிசேட அதிரடிப்படை ... நீதிமன்ற நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவித்தனர். (இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 140 | 150 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 130 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 280 | 340 | 280 | 320 | 400 |
| தக்காளி | 100 | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 120 | 80 | 80 |
| கோவா | 120 | 120 | 150 | 110 | 160 |
| கரட் | 200 | 280 | 280 | 220 | 320 |
| பூசணி | 50 | 50 | 60 | 80 | 100 |
| புடோல் | 80 | 120 | 90 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 350 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 140 | 120 | 160 |
| பாகற்காய் | 200 | 200 | 250 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 30 | 60 | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 150 | 180 | 120 | 130 | 160 |
| லீக்ஸ் | 300 | 250 | 320 | 140 | 320 |
| பீற்றூட் | 150 | 100 | 200 | 70 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 320 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 400 | 1200 | 550 | 300 | 320 |
| போஞ்சி | 140 | 120 | 150 | 110 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 160 | 100 | 120 |
| கீரை-1பிடி | 40 | 50 | 80 | 40 | 60 |
| தேசிக்காய் | 150 | 300 | 150 | 120 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 45-60 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 500 | 400 | 150 | 280 |
| வெங்காயப்பூ | 400 | – | – | – | – |
| முள்ளங்கி | 120 | 100 | – | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 15 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 80 | 150 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாதவனின் எதிர்காலம்



"நான் பள்ளிக்கூடத்தில படிச்சப்ப நான்தான் வகுப்பிலேயே முதல் மாணவனா இருந்தேன். ஆனா நம்ப பையன் ஒரு மக்கா இருக்கானே!" என்றான் சங்கரன்.

"ஏங்க, நம்ப பையன் எண்பது மார்க்குக்கு மேலே வாங்கிறான். அவனைப் போய் மக்குங்கறீங்களே!" என்றாள் அவன் மனைவி சாந்தா.

"தொண்ணூற்றெட்டு மார்க்கு, நூறு மார்க்கெல்லாம் சாதாரணமாகிவிட்ட இந்தக் காலத்தில, எண்பது மார்க்குக்கெல்லாம் என்ன மதிப்பு இருக்கு?"

"டியூஷன் வச்சுப் பாக்கலாமா?"

டியூஷன் வைத்தார்கள். பெரிய முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. டியூஷன் ஆசிரியரிடம் கேட்டபோது "பையன் கொஞ்சம் டல்தான் சேர்!" என்றார் அவர். பள்ளி ஆசிரியர்களும் இதே கருத்தைத்தான் தெரிவித்தார்கள். "சரி. அவ்வளவுதான். அவன் விதிப்படி நடக்கட்டும்" என்று சங்கரன் விட்டு விட்டான்.

சங்கரன் பொறியியல் படிப்புப் படித்து விட்டு, தானே ஒரு தொழிற்சாலையை உருவாக்கி நடத்திக் கொண்டிருந்தான். தனக்குப் பிறகு தன் பையன் அதை நடத்த வேண்டும் என்ற விருப்பம் அவனுக்கு இருந்தது.

எனவே மாதவனின் பள்ளிப்படிப்பு முடிந்ததும் அவனைப் பொறியியல் படிப்பில் சேர்த்தான். மாதவன் வாங்கிய எண்பது சதவீத மதிப்பெண்களுக்கு அவனுக்கு சுமாரான ஒரு கல்லூரியில்தான் இடம் கிடைத்தது. அதுவும் நன்கொடை கொடுத்து!

பையன் எப்படியோ பொறியியல் பட்டதாரி ஆகி, ஒரு நல்ல தொழில் நிறுவனத்தில் வேலைக்கும் சேர்ந்து விட்டால், அங்கே ஓரளவுக்கு அனுபவம் பெற்ற பிறகு தன்னுடைய நிறுவனத்தை நிர்வகிக்கும் திறமை பெற்று விடுவான் என்பது சங்கரனின் நம்பிக்கை.

முதல் இரண்டு ஆண்டுகளில் மாதவன் சுமாரான மதிப்பெண்கள்தான் வாங்கி வந்தான். ஆனால் மூன்றாம் ஆண்டில் பொறியியல் பாடங்களைக் கற்கத் தொடங்கியபின் அவனுக்குப் படிப்பில் அதிக ஆர்வம் வந்து விட்டதாகத் தோன்றியது. குறிப்பாக புறஜெக்ட் வேர்க், செமினார் போன்றவற்றில் அவனுக்கு ஈடுபாடு அதிகம் இருந்தது. தன் தந்தையின் தொழிற்சாலைக்கு நான்கைந்து முறை சென்று அதன் நடைமுறைகளை கவனித்து அறிந்து கொண்டான்.

மாதவன் இறுதி ஆண்டுக்கு வந்தபோது அவன் செய்ய வேண்டிய புறஜெக்ட் வேர்க்குக்குத் தன் தந்தையின் தொழில் நிறுவனத்தையே எடுத்துக் கொள்ள நினைத்தான் மாதவன். இதைப்பற்றி அவன் தன் தந்தையிடம் பேசியபோது, "உன் புறஜெக்டுக்கு எடுத்துக்கொள்ளப் போகும் விடயம் என்ன?" என்று கேட்டான் சங்கரன்.

"சில தொழில்நுட்ப மாறுதல்களைச் செய்து, செயற்பாடுகளை எளிமையாக்கி, உற்பத்தித் திறனை அதிகமாக்குவது பற்றித்தான்" என்றான் மாதவன்.

"நான் வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி என் தொழிற்சாலையை உருவாக்கியிருக்கிறேன். இப்போது வெளிநாட்டு நிறுவனத்துடனான என்னுடைய ஒப்பந்தம் முடிந்து விட்டது. ஆனாலும் அதே தொழில்நுட்பத்தை நான் தொடர்ந்து பயன்படுத்தலாம். இதில் பெரிய மாறுதல்கள் எதையும் உன்னால் செய்ய முடியாது"

"நீங்களே சொன்னபடி, இது பழைய தொழில்நுட்பம். அதனால்தான் வெளிநாட்டு நிறுவனம் இதே தொழில்நுட்பத்தைத் தொடர்ந்து பயன்படுத்த உங்களை அனுமதித்திருக்கிறது. அவர்கள் வேறு தொழில்நுட்பத்துக்கு மாறியிருப்பார்கள்!"

"அதைப்பற்றி நமக்கென்ன? இந்தத் தொழில்நுட்பம் நமக்குப் பயனுள்ளதாக இருக்கிறது. மற்ற நிறுவனங்களுடன் போட்டி போட்டு என்னால் நிற்க முடிகிறது. இதற்கு மேல் என்ன வேண்டும்?"

"இதற்கு மேலும் செய்யலாம் அப்பா. எனக்குச் சில யோசனைகள் இருக்கின்றன. அவற்றைச் செயற்படுத்தினால், அதிக முதலீடு செய்யாமல் நம் தொழிற்சாலையை இன்னும் நவீனமாக்கலாம். இதனால் உற்பத்தித் திறன் அதிகரித்து, தயாரிப்புச் செலவு குறையும்"

"உன் புறஜெக்டுக்காக என்ன மறுதல்களை வேண்டுமானாலும் உன் ரிப்போர்ட்டில் சிபாரிசு செய். ஆனால் அதையெல்லாம் நடைமுறைப்படுத்த முடியும் என்று எதிர்பார்க்காதே!" என்றான் சங்கரன்.

தன் புறஜெக்டுக்காக மாதவன் தன் சக மாணவர்களுடன் பல நாட்கள் தொழிற்சாலைக்கு வந்து, தொழில் நடைமுறைகளை கவனித்து ஆராய்ந்தான். தொழிற்சாலையில் பணிபுரிந்த உயர் அதிகாரிகளிடமும் தொழிலாளர்களிடமும் பல நுணுக்கங்களைக் கேட்டறிந்தான். ஆனால் சங்கரன் இதில் எதிலும் கலந்து கொள்ளவில்லை.

மாதவனின் புறஜெக்ட் தயாரானதும் அதைக் கல்லூரியில் சமர்ப்பித்தான். அப்போதும் சங்கரன் அதைப் படித்துப் பார்க்கவில்லை. சில வாரங்களுக்குப் பிறகு, மாதவனின் புறஜெக்ட் பல்கலைக்கழக அளவில் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்ததும் சங்கரனுக்கு வியப்பு ஏற்பட்டது.

மாதவனிடம் புறஜெக்ட் ரிப்போர்ட் நகலை வாங்கிப் படித்துப் பார்த்தான். அதில் தெரிவிக்கப்பட்டிருந்த யோசனைகள் சங்கரனுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தின. அவை நடைமுறைக்கு ஏற்றதாகவும் இலாபகரமானதாகவும் தான் தோன்றின.

மாதவனின் புறஜெக்ட் ரிப்போர்ட்டை ஒரு தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனத்திடம் கொடுத்து ஆராயச் சொன்னான். அவர்கள் அதற்குச் சில மாதங்கள் ஆகும் என்று சொன்னார்கள்.

இதற்கிடையில், மாதவனுக்கு கம்பஸ் இன்டர்வியூவில் ஒரு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அவனுடைய படிப்பு முடிந்ததும் வெளியூரிலிருந்த அந்த நிறுவனத்துக்கு அவன் வேலைக்குச் சென்று விட்டான்.

சங்கரன் அணுகியிருந்த தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனம் அவன் தொழிற்சாலைக்குப் பொறியியல் வல்லுநர்களை அனுப்பி மாதவனின் புறஜெக்ட் ரிப்போர்ட் பற்றி ஆய்வு செய்து, தனது கருத்தைத் தெரிவிக்க ஆறு மாதங்கள் ஆகி விட்டன.

மாதவனின் புறஜெக்டை நிச்சயம் அமுல்படுத்தலாம் என்று கருத்துத் தெரிவித்திருந்த அந்த நிறுவனம், அதை எப்படிச் செயற்படுத்தலாம் என்று சில ஆலோசனைகளையும் கூறியிருந்தது. சில இலட்சங்களும் பல மாதங்களும் செலவழிந்திருந்தாலும் நம்பிக்கையுடன் செயற்பட அந்த ரிப்போர்ட் சங்கரனுக்கு உதவியாக இருந்தது.

சங்கரன் ஒரு முடிவுக்கு வந்தான். மாதவனிடம் தொலைபேசியில் பேசினான்.

"டேய் மாதவா! உன்னுடைய புறஜெக்ட் பிரமாதமா இருக்குன்னு நம்ப கன்சல்டன்ட் சொல்லிட்டாங்க.

அதை நான் உடனே செயற்படுத்தலாம்னு இருக்கேன்"

"ரொம்ப சந்தோசம் அப்பா. எனக்கு முதலிலிருந்தே நம்பிக்கை இருந்தது"

"கரெக்ட். ஆனா ஒரு பெரிய மாறுதலைப் பண்றதுக்கு முன்னால நிபுணர்களிடம் ஆலோசனை கேட்கிறது அவசியம் இல்லையா? சரி.

இப்ப நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன். நீ தயாரிச்ச புறஜெக்டை நீயே செயற்படுத்தணும்னு நினைக்கிறேன். நீ வேலையை ரிசைன் பண்ணிட்டு வந்துடு"

"இல்லையப்பா. இங்கே கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கு. இப்பதான் கற்றுக் கொள்ள ஆரம்பிச்சிருக்கேன். நீங்கள் முன்னர் சொன்னபடி நான் ஒரு பெரிய கம்பயினியில நாலைந்து வருடமாவது வேலை செய்து விட்டு அதன் பின்பு நம்ப கம்பனிக்கு வந்தால் எனனுடைய அனுபவம் நமக்கு உதவியாக இருக்கும்.

"நான் அப்பப்ப லீவில அங்கே வரும்போது, சும்மா பக்றரிக்கு வந்து எல்லாம் எப்படி இருக்குன்னு பாத்துட்டுப் போறேன். எப்ப எனக்கு ஓரளவுக்காவது அனுபவம் கிடைச்சிருக்குன்னு எனக்குத் தோணுதோ, அப்ப வந்து நம்ப கம்பீனியில சேந்துக்கிறேன்!" என்றான் மாதவன்.

தொலைபேசியை வைத்து விட்டு சங்கரன் சற்று நேரம் யோசனையில் இருந்தான்.

"என்ன யோசிக்கிறீங்க?" என்றாள் மனைவி.

"நான் சொந்தமா தொழில் ஆரம்பிச்சு வெற்றிகரமா நடத்திக்கிட்டு வராததால என்னை ஒரு புத்திசாலின்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். ஆனால் நம்ப புள்ள என்னை வீட ரொம்ப புத்திசாலியா இருக்கான்!" என்றான் சங்கரன்.

"முன்பெல்லாம் அவனை மக்குன்னு சொல்லுவீங்களே?" என்று குத்திக் காட்டினாள் மனைவி.

"அவன் மக்கு இல்லை. நான்தான் மக்கு" என்றான் சங்கரன் பெருமிதத்துடன்.

குறள் 68

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

பொருள்:

தாம் பெற்ற பிள்ளைகள் தங்களைவிட அறிவுள்ளவர்களாக இருப்பது இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் இனிமை பயக்கக் கூடியது.

## பழமொழிகள்

- கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
- சாகிறவரைக்குவஞ் சங்கடமானால் வாழுகிறது எக்காலம்?
- நல்லவன் என்று பெயர் எடுக்க நெடுநாட் செல்லும்.
- அள்ளிக் கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன்.
- கைக்கோளனுக்குக் காற்புண்ணும் நாய்க்குத் தலைப்புண்ணும் ஆறா.
- தேரோட போச்சு திருநாளு . தாயோட போச்சு பிறந்த அகம்.
- தலையாரியும் அதிகாரியும் ஒன்றானால் சம்மதித்தபடி திருடலாம்.
- சோற்றில் கிடக்கிற கல்லை எடுக்கமாட்டாதவன் ஞானத்தை எப்படி அறிவான்?
- துட்டு வந்து போட்டியிலே விழுந்ததோ . திட்டு வந்து பொட்டியிலே விழுந்ததோ?

## கரடி மாமா



குழந்தைகள்:கரடி மாமா கரடி மாமா
எங்கே போறீங்க?
கரடி: காட்டுப்பக்கம் வீடு இருக்கு
அங்கே போறேன்

குழந்தைகள்: கரடி மாமா கரடி மாமா
எங்கே போறீங்க?
கரடி: காட்டுப்பக்கம் வீடு இருக்கு
அங்கே போறேன்

குழந்தைகள்: கம்பளிச்சட்டை நல்லா இருக்கு
யாரு தந்தாங்க?
கரடி: கடவுள் தந்த சொத்துத்தான்
வேறு யாருங்க

குழந்தைகள்: கம்பளிச்சட்டை நல்லா இருக்கு
யாரு தந்தாங்க?
கரடி: கடவுள் தந்த சொத்துத்தான்
வேறு யாருங்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கெட்ட உள்நோக்கத்தோடு கூறப்படும் ஓர் உண்மை, ஆயிரம் பொய்களைவிட மோசமானதாகும்.
- சார்லஸ் ரூபி பிளேக்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூட்டமைப்பு - ரணில் கூட்டாக சஜித்துக்குத் துரோகம்

தர்மத்தைக் காப்பாற்ற யுகம் தோறும் நான் அவதாரம் எடுக்கிறேன் என்கிறார் கிருஷ்ண பரமாத்மா.

ஆக, இங்கு தர்மம் என்பது மிகவும் முக்கியமானது. எந்தச் செயலைச் செய்தாலும் அதில் தர்மம் பின்பற்றப்பட வேண்டும். இல்லையேல் அதுவே மிகப்பெரும் பாவமாகும்.

இதனாலேயே அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்கிறார் இளங்கோ அடிகள்.

எனினும் அரசியல் பிழைத்ததை நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் காண முடிந்தது.

இதை நாம் கூறுவதற்காக தேர்தலில் அறம் பிழைத்ததாக யாரும் கருதிவிடக் கூடாது.

மாறாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவை நம்பவைத்து தோற்கடித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வஞ்சகத்தனத்தையுமே இங்கு நாம் குறிப்பிடுகின்றோம்.

ஆம், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸ, கோத்தபாய ராஜபக்ஷ ஆகிய இருவருக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது.

இருவரில் வெற்றி யாருக்கு உரியது என்பதை மதிப்பிட முடியாத அளவில் தேர்தல் களம் இருந்தது.

எனினும் சஜித் பிரேமதாஸவுக்கு தமது ஆதரவைத் தெரிவித்து பகிரங்கமாக அறிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் பகுதிகளில் மேடை போட்டு சஜித் பிரேமதாஸவுக்காகப் பிரசாரமும் செய்தது.

தாங்கள் செய்கின்ற பிரசாரம் தென்பகுதி மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கம் கூட்டமைப்பிடம் இருந்ததை எவரும் அவதானிக்க முடியும்.

இதற்கு மேலாக ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட கோத்தபாய ராஜபக்ஷவைக் கூட்டமைப்பினர் கடுமையாக விமர்சனம் செய்தனர்.

இந்த விமர்சனங்களைப் பார்த்தவர்கள் கோத்தபாய ராஜபக்ஷ வென்றால் இவர்களின் கதி என்ன என்று மூக்கில் விரலை வைக்குமளவுக்கு அவர்கள் கோத்தபாய ராஜபக்ஷவை கடுமையாகச் சாடினர்.

தாங்கள் அறிவிக்காமல் விட்டாலும் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கே தங்களின் வாக்குகளை வழங்குவர் என்பதை கூட்டமைப்பு நன்கு அறிந்திருந்தது.

இதற்கு மேலாக, சஜித் பிரேமதாஸவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிந்தால், சிங்கள மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்ற உண்மையையும் கூட்டமைப்பு நன்கு தெரிந்து வைத்திருந்தது.

நிலைமை இதுவாக இருந்தும் தேர்தலுக்கு மூன்று தினங்களுக்கு முன்பாக கூட்டமைப்பின் முக்கிய புள்ளிகள் சிலர் கண்டபாட்டில் கதைக்க, ஒட்டுமொத்த சிங்கள மக்களும் திரண்டெழுந்து தங்கள் வாக்குகளை கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வழங்கினர்.

ஆக, சமபலத்துடன் இருந்த தேர்தல் களத்தை மூன்று நாட்களுக்குள் மாற்றியமைத்து சஜித் பிரேமதாஸவுக்கு நம்பிக்கைத் துரோகத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் செய்து முடித்தது.

கூடவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி சஜித்தை வஞ்சித்தார்.

ஆக, சுருங்கக் கூறின் நம்பிக் கெட்ட ஒரு பாத்திரமாக சஜித் ஆகிவிட்டார். இதற்குப் பின்னணியில் என்ன நடந்தது என்பதைக் காலம்தான் காட்டித்தர வேண்டும்.

# ஜனாதிபதியின் அழைப்பை வரவேற்கின்றோம்

## கிழக்கு முன்னாள் முதலமைச்சர் அஹமட் அகமகிழ்வு

(கொழும்பு)

'இலங்கையர்என கைகோர்க்க வாருங்கள்' என சிறுபான்மை சமூகங்களுக்கு அழைப்புவிடுத்த இலங்கையின் 7ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் அகமகிழ்கின்றோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நஸிர் அஹமட் தெரிவித்தார்.

அவர் நேற்று விடுத்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தேர்தல் முடிவு நாட்டு மக்களுக்கு நல்லதொரு செய்தியைச் சொல்லியுள்ளது. குறிப்பாக இருதுருவநிலை ஏற்பட்டுள்ளமை நிரூபணமாகியுள்ளது. இதனை மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எனினும் புதிய ஜனாதிபதி பதவி ஏற்ற வைபவத்தின்போது தெரிவித்த கருத்து மிகச் சிறப்பான ஒன்றாகும்.

அதாவது "இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மை பௌத்த மக்களால் மாத்திரம் வெற்றி பெற முடியும் என நான் நம்பியபோதும் அந்த வெற்றியின் பங்காளிகளாக தமிழ், முஸ்லிம்மக்களையும்இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தேன். ஆனாலும் அவர்கள் அதனை புறக்கணித்தனர்.

எனினும் இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் ஜனாதிபதி என்ற நிலையில் இனிவரும் காலங்களில் நாம் இலங்கையர் என தொடர்ந்து பயணிக்க என்னுடன் கைகோர்த்து செயற்பட முன் வாருங்கள் என அவர் அழைத்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாக இருக்கின்றது.

சிறுபான்மை மக்களை அனுசரித்து அவர்களது அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் அவர் தமது பணிகளை தொடருவாராக இருந்தால் அனைத்து சமூகங்களும் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளும் ஒரு தலைவராக அவர் எதிர்காலத்தில் சிறப்பு பெறுவார் என்பது திண்ணம்.

சிங்கள சமூகம் பெருவாரியாக ஏற்றுக்கொண்டுள்ள ஒரு தலைவர் என்ற ரீதியில் இது காலவரையில் சிறுபான்மை சமூகங்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைப் புதிய ஜனாதிபதி முன்வைப்பாராக இருந்தால் அதனைச் சிங்களச் சமூகம் ஏற்றுக்கொள்ளும் என்பதை நான் திடமாக நம்புகின்றேன்.

எனவே அனைத்து சமூகங்களின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டும் வண்ணம் சிறந்ததொரு முன்னுதாரணம் உள்ள ஆட்சியை அவர் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என இவ்வேளையில் எமது சமூகத்தின் சார்பாக வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நகையைப் பொறுப்பேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் நகையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் வைத்தியசாலைப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு உரிய ஆதாரத்தைச் சமர்ப்பித்து நகையை அடையாளம் காட்டிப் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

# கோத்தபாயவின் வெற்றி எதிரொலி பங்குச்சந்தை விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெற்றதையடுத்து கொழும்பு பங்குச் சந்தை விலைகள் பெருமளவில் உயர்வடைந்தது.

அவரது வெற்றியையே தரகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் கொண்டாடுவதால் கொழும்பு பங்குச் சந்தையின் நேற்றைய தினம் 12:30 மணி நிலவரத்தின்படி ஆரம்ப வர்த்தகத்தில் பங்கு விலைகள் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி அனைத்து பங்கு விலைக் குறியீடும் மதியம் 12.30 மணியளவில் 1.59 சதவீதம் அதிகரித்து 6,118. 37 ஆக உயர்வடைந்தது. அதே நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ் அண்ட் பி (SAP) 2.03 சதவீதமாகவும் உயர்ந்து 3,045.60 வரை ஆக உயர்வடைந்துள்ளது. அத்தோடு தற்போது வரை 1.7 பில்லியன் ரூபாயை எட்டியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அரசியல் நிச்சயமற்ற தன்மையிலிருந்து வெளிவந்துள்ளதாகவும் ஒரு நிலையான அரசாங்கத்தின் சாத்தியம் தனியார் முதலீட்டை உயர்த்தக்கூடும் என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை கடந்த உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் வீழ்ச்சியடைந்திருந்த பங்கு விலைகள் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதாக ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கள் பீட மண்டபத்தில் ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையினர் நடத்தும் ஒரு நாள் ஆய்வுக் கருத்தரங்கு கலைப்பீடாதிபதி கலாநிதி க.சுதாகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி கலந்து கொள்ளவுள்ளார். (ம-3)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

" உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே"

-மகாத்மா காந்தி (இந்திய தேசபிதா)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

சமுதாயத்தின் அடிப்படை அமைப்பு குடும்பம். குழந்தைக்கு முதல் பள்ளிக்கூடம் வீடுதான். பெற்றோரே குழந்தையின் முதல் ஆசிரியர்கள்.

- ஹர்ஷானந்தர்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில் உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறை ஒரு பகுதி, தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் ஈரப்பெரியகுளம், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், உளுக்குளம், செட்டிகுளம் நகர பிரதேசம் ஒருபகுதி ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, Timex ஆடைத்தொழிற் சாலை, வங்காலைப்பாடு ஐஸ்தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, Industrial Estate I&II, Palmyrah house, தலைமன்னார் கடற்படை முகாம், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன திட்டம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### இறைஞானம்



இல்லறத்தான் இறைபக்தி கொண்டவனாக இருக்கவேண்டும். அதே வேளையில் அவன் இடையீடு இல்லாமல் செயல்புரிய வேண்டும். தன் கடமைகள் அனைத்தையும் செய்ய வேண்டும். செயல்கள் அனைத்தின் பலனையும் அவன் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

வேலை செய்துவிட்டு அதன் பலனை பொருட்படுத்தாதிருப்பது, ஒருவனுக்கு உதவி செய்தபின் அவன் நன்றியுடன் இருக்கவேண்டும் என்று எண்ணாமல் இருப்பது, ஒரு வேலையைச் செய்துவிட்டு அதனால் பெயரோ, புகழோ வருமா? எதுவும் கிடைக்காமல் போகுமா? என்பது பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் இருப்பது- இவையெல்லாம் மிகவும் கடினமான காரியங்கள்.

உலகமே புகழும் என்றால் வடிகட்டிய கோழைகள் கூட வீரனாக மாறி விடுவான். சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமானால் அது தன் மீது புகழ் கொடியை ஏற்றுகிறது என்றால் கடைந்தெடுத்த முட்டாள்கூட வீரதீர செயல்களைச் செய்துவிடுவான்.

ஆனால் பிறர் ஆமோதிப்பதை எதிர்பார்க்காமல் தொடர்ந்து நன்மை செய்வது என்பதுதான் உண்மையிலேயே ஒருவன் செய்ய முடிந்த தியாகங்கள் தலைசிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழி ஐக்கியம் அணியை வென்றது கைதடி வளர்மதி அணி



செவிப்புலன் வலுவுற்றோர் நிறுவனம் தென்மராட்சி ரீதியாக நடத்திவரும் 5 ஓவர் 7 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டியில் கைதடி வளர்மதி அணி 35 ஓட்டங்களல் வெற்றி பெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நாவற்குழி ஐக்கிய விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பை மேற்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வளர்மதி அணி 5 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட் இழப்பிற்கு 95 ஓட்டங்களை பெற்றது. அதில் லக்சுதன் 65 ஓட்டங்களையும் ஜனிஸ்ரன் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

96 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நாவற்குழி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 5 ஓவர் நிறைவில் 5 விக்கெட் இழப்பிற்கு 60 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 35 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. இதன்மூலம் கைதடி வளர்மதி அணி அரை வெற்றிப் பதிவு செய்தது. (க)

# எங்களுக்கு அமைதி தாருங்கள்

## கோத்தாவிடம் ஆனோல்ட் வேண்டுகோள்



எங்களுக்கு அமைதி மற்றும் வளர்ச்சி தான் வேண்டும் எனவும் அதை நீங்கள் கொடுப்பீர்கள் என நம்புவதாகவும் கோத்தபாயவுக்கு தனது டுவிட்டர் பதிவின் மூலம் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரசல் ஆனோல்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியைச் சேர்ந்த தமிழ் வீரரான ஆனோல்ட் தனது டுவிட்டர் பதிவில் கோத்தபாயவுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.

ஒற்றுமை, அமைதி, வளர்ச்சி இது தான் நாம் எல்லோருக்கும் தேவைப்படுகிறது. அதை நோக்கி நீங்கள் எங்களை கொண்டு செல்வீர்கள் என நம்புகிறோம். உங்களுக்கு என் வாழ்த்துக்கள் என பதிவிட்டுள்ளார்.


இந்த பதிவை கோத்தபாயவுடன் சேர்ந்து நாமல் டுவிட்டர் ஐடிக்கும் ஆனோல்ட் டேக் செய்துள்ளார். (க)

# அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# அண்ணன் அடித்த பந்து தம்பி மூக்கைப் பதம் பார்த்தது



அவுஸ்திரேலியாவில் நடந்த கிரிக்கெட் போட்டியில் தனது சகோதரர் பீல்டிங் நின்ற நிலையில், துடுப்பாட்ட வீரர் அடித்த பந்து அவர் மூக்கை பதம் பார்த்ததில் இரத்தம் கொட்டியது.

அவுஸ்திரேலியாவில் மார்ஷ் கோப்பைக்கான உள்நாட்டு ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நடந்து வருகிறது. அடிலெய்டுவில் நடந்த ஆட்டம் ஒன்றில் மேற்கு அவுஸ்திரேலியா - தெற்கு அவுஸ்திரேலியா அணிகள் மோதின.

இதில் தெற்கு அவுஸ்திரேலியா பட்டிங் செய்து கொண்டிருந்த போது அந்த அணியின் வெஸ் அகர் அடித்த ஒரு பந்தை கட்ச் செய்ய முயற்சித்த போது அவரது சகோதரரான ஆஷ்டன் அகரை பதம் பார்த்தது.

சில அடிகள் ஓடி வந்து அவர் பந்தைப் பிடிக்க தடுமாற, பந்து நேராக அவரது மூக்கின் மேல் பகுதியில் பலமாக தாக்கி இரத்தம் கொட்டியது. உடனடியாக மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. (க)

# மேற்கிந்தியத்தீவு பெண்கள் அணிக்கு அடி கொடுக்கும் இந்திய பெண்கள் அணி



இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி மேற்கிந்தியத்தீவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் 5 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று 3-0 என்ற கணக்கில் இந்திய அணி ஏற்கனவே தொடரை கைப்பற்றியது.

இதையடுத்து 4 ஆவது இருபது-20 போட்டி கயானாவில் உள்ள புறொவிடன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. மழை காரணமாக இந்த போட்டி 9 ஓவர்களாக குறைக்கப்பட்டது. முதலில் பட் செய்த இந்திய அணி 7 விக்கெட் இழப்பிற்கு 50 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து பட் செய்த மேற்கிந்தியத்தீவு அணி 9 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 45 ஓட்டங்களே எடுத்தது. இதனால் 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

ஏற்கனவே 3 போட்டிகளில் வெற்றி பெற்ற நிலையில் தற்போது 4 ஆவது போட்டியிலும் வெற்றி பெற்று இந்திய பெண்கள் அணி ஆதிக்கம் செலுத்தியுள்ளது. 5 ஆவது இருபது-20 போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கு முன்னதாக நடைபெற்ற 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை இந்திய பெண்கள் அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (க)

# டெஸ்ட் போட்டியிலேயே அதிரடி காட்டும் மயங்க் அகர்வாலுக்கு குவியும் வாய்ப்புகள்

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிராக அடித்த இரட்டைச்சத டெஸ்ட் போட்டியில் அகர் வாலின் 2 ஆவது இரட்டை சதம் ஆகும். 8 இன்னிங்சில் அவர் 2 இரட்டை சதம் அடித்து சாதித் தார். இதன் மூலம் அவர் பிராட் மேனை முந்தி சாதனை படைத்தார்.

மேலும் அகர்வாலின் ஆட்டம் அதிரடியாக இருந்தது. 8 சிக்கர்கள் அடித்ததன் மூலம் ஒரு இன்னிங்சில் அதிக சிக்சர் அடித்த சித்துவின் சாதனையை சமன் செய்தார்.

டெஸ்ட் போட்டியில் அதிரடியாக விளையாடும் மயங்க் அகர்வாலுக்கு ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவரில் விளையாட வாய்ப்பு கிடைக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொடக்க வீரர் வரிசையில் விளையாடும் தவானின் ஆட்டம் அண்மைக்காலமாக மிகவும் மோசமாக இருக்கிறது. இதனால் அவருக்கு பதிலாக மயங்க் அகர் வாலை ஒருநாள் போட்டிக்கு கொண்டு வரலாம் என்று ஆதரவு அதிகரித்து வருகிறது.

இந்திய அணி தற்போது பங்களாதேஷுடன் விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடர் முடிந்த பிறகு மேற்கிந்தியத்தீவுடன் மூன்று 20 ஓவர் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

20 ஓவர் போட்டிகள் எதிர்வரும் டிசெம்பர் 6, 8 மற்றும் 11 ஆகிய திகதிகளிலும் ஒரு நாள் போட்டிகள் டிசெம்பர் 15, 18 மற்றும் 22 ஆகிய திகதிகளிலும் நடக்கிறது.

மேற்கிந்தியத்தீவு தொடரில் தவானை நீக்கி விட்டு அகர்வாலுக்கு வாய்ப்பு வழங்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. ஒருவேளை இந்தத் தொடரில் அணியின் தற்காலிக தலைவரான ரோகித் சர்மாவுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டால் அகர்வால் நிச்சயம் இடம்பெறுவார்.



இந்திய அணி நியூசிலாந்து சென்று ஐந்து 20 ஓவர் போட்டி, 3 ஒருநாள் ஆட்டம் மற்றும் 2 டெஸ்டில் விளையாடுகிறது. இதில் சிறப்பு கவனம் செலுத்துவதற்காக ரோகித் சர்மாவுக்கு ஓய்வு அளிக்கப்படலாம்.

மேற்கிந்தியத்தீவுகள் தொடரில் ரோகித் அல்லது தவான் இடத்தில் அகர்வாலுக்கு வாய்ப்பு கிடைக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக கோப்பை போட்டியில் கடைசி நேரத்தில் விஜய் சங்கருக்கு மாற்றாக மயங்க் அகர்வால் அனுப்பப்பட்டார். ஆனாலும் விளையாட வாய்ப்பு வழங்கப்படவில்லை. உள்ளூர் போட்டி மற்றும் டெஸ்டில் வேகமாக ஆடுவதால் அவர் ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் அணியில் தேர்வு செய்யப்படுவதை தவிர்க்க முடியாதவராக இருக்கிறார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு இம்முறை வாக்களித்தீர்கள் கேகாலையில் வீடு புகுந்து தாக்குதல்



(கேகாலை)

கேகாலையில் தமிழ் பிரதேசத்தில் குண்டர்கள் சிலர் புகுந்து தமிழர்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தியதாக தெரிய வருகிறது.

எட்டியந்தோட்டை கணேபல்ல தோட்டத்திற்குள் நேற்று இரவு நுழைந்த கும்பல், அங்குள்ள தமிழ் மக்களின் சில வீடுகளை சேதப்படுத்தியுள்ளனர்.

அங்குள்ள சில பெண்களிடம் அநாகரிகமாக நடக்க முயற்சி செய்ததாக கணேபல்ல பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

யாருக்கு இம்முறை வாக்கு அளித்தீர்கள் என்று கேட்டு மிகவும் அநாகரிகமாக குறித்த கும்பல் செயற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் குறித்து எட்டியந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில், கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பொதுஜன பெரமுன கட்சியின் மாவட்ட அமைப்பாளருமான கனக ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

இது இரண்டு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினை எனவும், சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் கேகாலை பொலிஸாரை தொடர்பு கொண்டு வினவிய போது, இவ்வாறான சம்பவம் ஒன்று பதிவாகியிருப்பதாகவும், அந்த இடத்திற்கு பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், கூறியுள்ளனர். (ம-3)

## பாராளுமன்ற தேர்தலே...

பக்ஷ, ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அனைவரும் மக்களின் கருத்தை மதிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் நாட்டில் அடுத்து நிகழ வேண்டிய முக்கியமான விடயமென்றால் அது பாராளு மன்றத் தேர்தலை நடத்துவதாகும் எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பொறுப்பேற்றவுடன் அரசாங்கத்தின் பெரும்பாலான அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகியுள்ளனர்.

அதேபோன்று ஏனையோரும் பதவி விலகுவார்கள் என நம்புகின்றேன் என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## ஐ.தே.கவின்...

ராஜபக்ஷ பதவியேற்கவுள்ளார்.

இதன்போது புதிய அமைச்சரவை அமைச்சர்களும் பதவியேற்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து 25 முதல் 30 வரையான பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய அரசாங்கத்தில் இணையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் பல்வேறுமட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## பாராளுமன்றத்தை கலைக்க...

திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

பாராளுமன்றத்தை கலைக்கும் திட்டம் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவிற்கு நேற்றிரவு அனுப்பப்பட்டது.

இலங்கையின் அரசியலமைப்புப்படி பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுகால ஆயுளுடையது. இதன்படி, 2020 ஓகஸ்டில் பாராளுமன்றம் காலாவதியாகிறது.

19ஆவது திருத்தத்தின்படி பாராளுமன்றத்தை நான்கரை ஆண்டுகளில் கலைக்க முடியும். அதாவது 2020 பெப்ரவரியின் பின்னரே பாராளுமன்றத்தை கலைக்க முடியும். எனினும், பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையின் ஆதரவுடன் பாராளுமன்றத்தை கலைக்க முடியும். இதற்கு வசதியாகவே, ஐ.தே.கவின் சம்மதம் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

கோத்தபாய ஜனாதிபதியாக பதவியேற்ற போதிலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடியும் வரை தனது பதவியில் இருக்க அரசியலமைப்பு அனுமதிக்கிறது. (ம-3)

## புதிய அரசியல்...

றால், புதிய கூட்டணியுடன் பொதுத் தேர்தலில் களமிறங்க சஜித் தரப்பினர் தீர்மானித்துள்ளனர்.

இதன் காரணமாகவே சஜித் பிரேமதாசவுக்கு நெருக்கமான அமைச்சர்கள் தமது அமைச்சுப் பதவியில் இருந்து விலகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டணியை விடவும் அதிக ஆசனங்களை வென்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் பதவியை சஜித்திற்கு பெற்றுக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்மூலம் ஐக்கிய தேசிய கட்சியின் அதிகாரத்தை பெறுவதே அந்த குழுவின் நோக்கம் என குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவை வாழ்த்திய சஜித் பிரேமதாச, தான் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாகவும், மீண்டும் மக்கள் சேவைக்கு வருவதாகவும் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தலைவர்களின்...

அமைச்சர்களின்படமோ காட்சிப்படுத்த வேண்டாம் என உத்தரவிட்டுள்ளார்.

அரச அலுவலகங்களில் அரச தேசிய சின்னம் மட்டுமே காட்சிப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (ம-3)

## ஜனாதிபதி கோத்தாவுடன் பேச்சுவார்த்தைக்கு...

குறித்து அவருடன் பேசுவதற்கு தயாராக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்திருந்த போதிலும், கோத்தபாய ராஜபக்ஷவே வெற்றி பெற்றுள்ளார். இந்நிலையில் கூட்டமைப்பின் எதிர்கால நிலைப்பாடு குறித்து வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் தமிழ் மக்கள், இனப்பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை எதிர்பார்த்துத் தான் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளித்தனர். மக்களின் அவ்வாறான கோரிக்கைகளை நாட்டின் தலைவர் என்ற அடிப்படையில் கோத்தபாய ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டு அவை தொடர்பிலும் ஆராய வேண்டும்.

எனவே இவ்விடயம் குறித்து அவர் எம்மோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அழைத்தால் அதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். எதிர்வரும் தினங்களில் இது குறித்து ஆராயப்படும் என்றும் அவர் கூறினார். (ம-3)

## சந்தித்தார் இந்தியத்தூதுவர்...

பேச்சுவார்த்தை நடத்தினார்.

கோத்தபாய ராஜபக்ஷவை, நுகேகொட மீரிஹானவில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று இந்தியத் தூதுவர் சந்தித்திருந்தார்.

இந்திய தூதுவருடனான சந்திப்பின் முக்கியத்துவம் என்ன என்று ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த கோத்தபாய ராஜபக்ஷ, சாதாரணமாக சந்தித்தேன் என்று மாத்திரம் குறிப்பிட்டார்.

இந்தியா, சீனாவுடனான உறவுகளுக்கு இலங்கை எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் என்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கோத்தபாய ராஜபக்ஷ, மிகவும் முக்கியம், இந்தியாவும் சீனாவும், எமது அயல் நாடுகள், எப்போதும் எமது நீண்டகால நண்பர்களாகவும் உள்ளன என்று குறிப்பிட்டார்.

யாருக்கு கூடுதல் முக்கியத்துவம் என்று எழுப்பிய கேள்விக்கு அவர், இரண்டுமே முக்கியமானவை தான். எல்லா நாடுகளும் முக்கியம் தான். ஆனால் இந்தியா எமது அயல் நாடு என்று பதிலளித்தார்.

இந்தியா அயல் நாடு, சீனா பற்றி என்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கோத்தபாய ராஜபக்ஷ, சீனா பொருளாதார பங்காளி என்று குறிப்பிட்டார். (ம-3)

## ஏற்றுக்கொண்டார்...

தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றை பதிவிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-3)

## ஜனாதிபதியாக...

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 7 ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நிலையில் இன்று தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

நேற்றுக் காலை அநுராதபுரம் ருவன்வெலிசாயவில் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியின் செயலாளர் உதய செனவிரத்ன மற்றும் பிரதம நீதியரசர் முன்னிலையில் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்நிலையில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ இன்று தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார். (ம-3)

## நாட்டு மக்கள் இடையே பிரிவினையை...

கள் சக்தி இயக்கத்தின் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த தேர்தல் முடிவுகள் நாட்டில் ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்து நாம் அறிவோம். எம்நாட்டு சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் மத்தியில் இனபேதத்தை ஏற்படுத்தும் வகையிலான முடிவினை வழங்கியுள்ளது. இந்த முடிவுகள் நாட்டு மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு மாறாக பிரிவினையை ஏற்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளது.

தேர்தலின் போது மேடைகளிலும் ஊடகங்களிலும் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பிலே மக்கள் முடிவெடுத்துள்ளனர். வடக்கு கிழக்கு தமிழர்கள் 2005க்கு பின்னரான காலப்பகுதிகளில் தாம் எதிர்நோக்கிய சம்பவங்களை கருத்திற்கொண்டு வாக்களித்துள்ளனர். முஸ்லிம் மக்களும் அவர்களின் பாதுகாப்பிற்காக இவ்வாறான தீர்மானத்தை எடுத்துள்ளதுடன் தெற்கிலுள்ள சிங்கள மக்கள் அடிப்படைவாதிகளுக்கு பயந்தே இவ்வாறான தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இந்நிலையில் மக்களின் உண்மையான எண்ணம் இங்கு பிரதிபலிக்க வில்லை. எனினும் தற்போது மக்களால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்ளதான் வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் மக்களின் உரிமைகள் மற்றும் ஜனநாயகம் மீறப்படும் சந்தர்ப்பங்களில் நாங்கள் எப்போதும் போல் அவர்களுக்கு ஆதரவாக செயற்படுவோம் என்றும் அவர் கூறினார். (ம-3)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 795
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.11.18
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 65,079,490/-
வெற்றி இலக்கங்கள் 33 40 43 62 ஆங்கில எழுத்து E
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.:3263 திகதி:2019.11.18
வெற்றி இலக்கங்கள் 12 31 59 73 X
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 70,654,025/-
9555

ராசி அதிர்ஷ்டம்
திகதி 18/11/2019 | வெற்றி வாரம் 2681 | வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் மீனம் 15 35 43 52
செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,963,076
2019/11/19 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

மஹஜன சம்பத
திகதி 2019/11/18
சீட்டிழுப்பு இலக்கம் 4051
Z 7 5 6 2 2 3

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 18-11-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2304
F 23 63 68 71

மெகா பவர்
திகதி 2019/11/18
சீட்டிழுப்பு இலக்கம் 460
L 22 02 23 50 53

சுபிரி வாசனா
திகதி 18/11/2019
சீட்டிழுப்பு இலக்கம் 1479
08 49 53 54 55 10 48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 74வது பிறந்தநாளை
# குடும்பத்துடன் கொண்டாடினார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது 74ஆவது பிறந்தநாளை அவரது குடும்பத்தினர் மற்றும் ஆதரவாளர்களுடன் நேற்றுக் கொண்டாடியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாள் கேக் கானது தாமரை மொட்டுகளினால் அலங் கரிக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அடிமைகளே திரும்பிச் செல்லுங்கள்
# கோத்தாவின் பதவியேற்புக்கு சென்ற ஐ.தே.க அமைச்சர்களுக்கு பெரமுன ஆதரவாளர்கள் எதிர்ப்பு

(அநுராதபுரம்)

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக கோத்த பாய ராஜபக்ஷ நேற்று அநுராதபுரத்தில் பதவி யேற்றார். இந்த பதவியேற்பு நிகழ்விற்கு வந்த ஐ.தே.க பிரமுகர்களிற்கு மக்கள் கூச்சலிட்டு எதிர்ப்பு தெரிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ருவன்வெலிசாயவில் நேற்றுக் காலை நடந்த பதவியேற்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டிருந்தார்.

பின்னர், அமைச்சர்கள் ரவி கருணா நாயக்க, வஜிர அபேவர்த்தன, ஜோன் அமர துங்க, தயா கமகே, அர்ஜுன ரணதுங்க உள ளிட்ட அமைச்சர்கள் குழு நிகழ்விற்கு வந்தது. இதன்போது, பெரமுன ஆதரவாளர்கள் சூழ் ந்து பெரும் சத்தமிட்டு எதிர்ப்பு தெரிவித்தனர்.

அடிமைகளே இங்கு வர வேண்டாம், திரும்பிச் செல்லுங்கள் என கூச்சலிட்டனர். எனினும், ஐ.தே.க பிரமுகர்கள் சிரித்தபடி அந்த சூழலை சமாளித்தனர். (ம-3)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
DELIVERY IN 3-5 DAYS
UK-550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
0768226240
யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
V2 TRAVELS (C-8115)

கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
IELTS வகுப்புகளும் நடைபெறுகின்றன
UnLimmited Hours Classes 03/06 Months classes
எமது விசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்
யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்
WORLD EDUCATION CONSULTANCY
புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம் மற்றும் சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989 (C-8260)

# சுதந்திரத்தினை நிலைநாட்ட வேண்டும்
## சுமந்திரன் எம்.பி

நாடு பிளவுபடாத ஒரு சுதந்திரத்தினை நிலைநாட்ட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஏம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவிற்கு விடுத்த ஊடக செய்தி குறிப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மக்களின் மனிதாபிமானம் அடங்கிய உரிமைகள் உள்ளடங்கிய கோரிக்கை அடங்கிய விடயங்களில் உரிய தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும் என அவர் தெரிவித்ததுடன் மேலும் அவர்கள் சார்ந்த வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள்ஊடாக அதனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்


மேலும் புதிய ஜனாதிபதிக்கு எம் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர தெரிவித்தார். (ம-3)

சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8255)



வேலைவாய்ப்பு
அடுத்து வரும் ஆண்டில் எமது நிறுவனத்தின் கிளைகள் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஒவ்வொரு கிளைகளுக்கும் 08 வகையான வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் உள்ளன. ஒவ்வொரு கிளைகளுக்கும் 20 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதற்கான நேர்முகத்தேர்வு நடைபெறவுள்ளது.
18 வயதுக்கு மேற்பட்டவர் யாரும் தொடர்பு கொள்ளலாம்.
தகைமைக்கேற்ப பதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
சம்பள அளவுத் திட்டம் நேர்முகத்தேர்வில் கூறப்படும்.
இன்றே தொடர்பு கொள்ளுங்கள். (1104)
தொடர்பு: 077 591 8589, 077 815 1637

# மரண அறிவித்தல்



தோற்றம் 07 - 12 - 1949

மறைவு 17 - 11 - 2019

## நல்லதம்பி செல்வரத்தினம்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் சோறன்பற்று பளையை வசிப்பிடமாகவும் 3ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி செல்வரத்தினம் 2019.11.17 அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - மாணிக்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், பரமேஸ்வரி (சின்னக்கிளி) அவர்களின் பாசமிகு கணவரும் நகுலேஸ்வரி (சுவிஸ்), சீதா (பிரான்ஸ்), ராதிகா, ரேகா (பிரான்ஸ்), அசோக் (சுவிஸ்), ரேணுகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் Benhard Scarpetti (சுவிஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), விக்னேஸ்வரன் (CTB), ஸ்ரீகாந்தரூபன் (பிரான்ஸ்), முகுந்தன் (லண்டன்), சாளினி (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும் றொக்சன், றொபினா, பிரஜித், பிரஜீனா, கீர்த்தி, சானுஜன், சஜீவ், சனோச், றொசின், அஜின், நவீன், அர்விந், கார்ஸ், மதுரிகா, தசினா, தசியா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.11.2019) புதன்கிழமை அவரது மகளின் இல்லத்தில் (3ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை) இடம்பெற்று அன்னாரது பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

3ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. (C-8268) தகவல்:- குடும்பத்தினர் தொ.பே: 0778759616

யாழ்.முன்னணி ஆசிரியர்கள் பங்குபெறும்
க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான
இறுதிக் கருத்தரங்கு
O/L - 2019
விஞ்ஞானம் - A.சியாமளரூபன் 24.11.2019
கணிதம் - K.உமாகரன் - 24.11.2019
தமிழ் - க.மு.நித்தி - 24.11.2019
காலை 8.00 - 3.00 மணிவரை
வரலாறு- J.ஜெயகணேஷ் 25,26.11.2019 பி.ப 3.00 - 6.00 மணிவரை
Techno World (வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி)
வெளிமாணவர்கள் அனைவரும் பங்குபெறலாம். 077 017 5346
(C-8267)

இப்பொழுது விற்பனையில் 2020
யுனிலங்காஸ் பஞ்சாங்க கலண்டர் தினத்தாள் கலண்டர்
அழகு தரும் தெய்வீக வண்ணப் படங்கள்
இருநாதையர் வாக்கிய பஞ்சாங்க கணிப்பு
ராசி பலன், பொது அறிவு, ஆன்மீகத் தகவல்கள்
ஆலயங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அச்சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்
யுனிலங்காஸ் பப்ளிகேஷன்
தொலைபேசி: 077-6258778/ 0114 014438 e-mail: unilankas@gmail.com Find on Facebook: www.facebook.com/UnilankasBooks
(C-8264)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org